# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 ● இதழ் 27 ● 9 ஆகஸ்ட் 1970 ● பக்கங்கள் 8 ● விலை சதம் 10

### மாசேதுங் சிந்தனை

இன்று ஒருவன் பரந்துபட்ட தொழிலாளர் விவசாயிகளுடன் தன்னைத்தானே இணைத்துக் கொண்டால் அவன் ஒரு புரட்சிவாதி யாவான். நாளைய தினம் அவன் அப்படிச் செய்யத் தவறினால் அல்லது பொதுமக்களை அடக்கி ஒடுக்குவதற்கு ஒரு திருப்பம் எடுத்தால், அவன் புரட்சிவாதியல்லாதவனாக அல்லது ஒரு எதிர்ப்புரட்சிவாதியாக மாறி விடுவான்.

## அரசாங்கம் மக்களிடம் பிச்சை எடுக்கும்போது

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

# மேலதிக அலவன்ஸ் ஏன்?

**பாராளுமன்ற அங்கத்தவர்கள் அரசமைப்பு சபையின் உறுப்பினர்களாக அமரும் போது, அவர்களுக்கு மேலதிக அலவன்ஸ் வழங்க வேண்டும் என்ற பிரேரணை மிகவும் கேவலமானதொன்றாகும்.**

மிகவும் பிரபலமான வாய்ச் சவடால்காரரும், எம். பி.க்களிலேயே பெரிய பணக்காரருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்தன மேற்குறிப்பிட்ட பிரேரணையின் பின்னணிக்காரராக இருக்கும் வேளையில், அரசாங்கத்தில் செல்வாக்குள்ள வட்டாரமும் இதற்கு ஆதரவாய் இருப்பதாகவும் அறிய வருகிறது. இதன்படி அரசமைப்பு சபை உறுப்பினர்களுக்கு சபை கூடும் ஒவ்வொரு நாளைக்கும் 50 ரூபா மேலதிகமாக கொடுக்கப்படவேண்டும் என கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஒரு பக்கத்தில், திறைசேரி காலியாக இருப்பதாகக் கூறி அதற்காக ''நாட்டைக் காக்கும் நிதி''க்கு ஆகக் குறைந்த தொகையான ஒரு நாள் சம்பளத்தைத் தியாகம் செய்யும்படி மக்களை அரசாங்கம் கேட்டுள்ளது. மறுபக்கத்தில் தமது அலவன்ஸைக்கூட்ட வேண்டும் என்று எம். பி.க்கள் கோருகிறார்கள்.

இன்றைய பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு ஏதோ குறைந்த அலவன்ஸ் கொடுக்கப்பட்டால் அந்த அலவன்ஸைக் கூட்டவேண்டும் என்று கேட்பது ஆச்சர்யத்துக்குரியதல்ல. ஆனால், இன்று, உண்மையில் எம். பி. ஒருவருக்கு மாதம் 600 ரூபாய் அலவன்ஸாகக் கிடைக்கிறது. இதோடு சேர்த்து செயலாளர் அலவன்ஸ் என மாதம் 75 ரூபாய் கிடைக்கிறது. அத்துடன் இலவசப் போக்குவரத்து வசதிகள், தபால்—தந்தி, டெலிபோன் வசதிகளும் கிடைக்கின்றன. இவற்றையும்விட ஆகக் குறைந்தது 70 எம். பி. மார்களாவது வசிப்பதற்கென ஆடம்பரமான மாளிகையான ''சிராவஸ்தி''யும் உள்ளது. ''சிராவஸ்தி''யை நிர்வகிப்பதற்கு மக்களின் வரிப்பணத்திலிருந்து வருடம் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் (1,25,000) ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இதன்படி ''சிராவஸ்தி''யில் வசிக்கின்ற ஒவ்வொரு எம். பி. மாருக்கும் அரசாங்கம் மாதம் 150 ரூபாய் செலவழிக்கிறது. இது போதாதென்று எம். பி. மாருக்கென இன்னொரு மாளிகையும் ஒழுங்கு செய்யப்படுகிறதாம். அதாவது, சேர். ஏணர்ஸ்ட் டி சில்வாவின் வாசஸ்தலமான ''ஸ்ரீமதிபாய'' எனும் மாளிகையை எம். பி. மார்களுக்கு விடுதியாக்க ஆலோசிக்கப்படுகிறதாம்.

நாங்கள் இந்த எம். பி. மார்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகின்றோம். சராசரி தொழிலாளி ஒருவர் மாதம் 200 ரூபாய்க்குக் குறைவாகவும், விவசாயிகள் இதைவிடக் குறைவாகவும் வருமானம் பெறும் நாட்டில் உள்ள ஒரு எம். பி.க்கு மாதம் 600 ரூபாயுடனும், மேலதிகமாக கிடைக்கும் பக்க வருமானங்களுடனும் வாழ முடியாதா? கொழும்புக்கு வரும்போதெல்லாம் எம். பி. மார்கள் ''சிராவஸ்தி'' ''ஸ்ரீ மதிபாய'' போன்ற ஆடம்பரமான மாளிகைகளில்தான் தங்க வேண்டுமா? அத்தகைய மாளிகைகளிலேயா நம் நாட்டு மக்கள் வாழ்கிறார்கள்?

இப்போதுள்ள மந்திரி சபையில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் யாரும் தாங்கள் ''ஏழை'' என்று நடிக்க முடியுமா? மந்திரிமாருக்கும், பெரும்பாலான எம். பி. மாருக்கும் அவர்கள் பெறுகின்ற அலவன்ஸுகளை விட, வேறு தனிப்பட்ட வருமானங்கள் இல்லை என்று கூற முடியுமா? அவர்கள் தாங்களாகவே முன்வந்து தமது சொத்து விபரங்களை வெளியிட்டு தாங்கள் எவ்வளவு தூரம் ''ஏழைகள்'' என்பதை யாவது மக்களுக்குத் தெரியப்படுத்துவார்களா?

இன்றைய எம். பி.மார்கள் பலர் தேர்தலுக்கு முன்பு தாங்கள் மக்களுக்குச் சேவை செய்ய முன்வந்துள்ளதாக நடித்தார்கள். தேர்தலுக்கு பின்பு தங்களுக்கு எவ்வளவு நன்றாகச் சேவை செய்ய முடியும் என்பதே பிரச்சினையாக இருக்கிறது. இக்கபட நாடகம் அம்பலப்படுத்தப்பட வேண்டும். மக்களின் பிரதிநிதிகள் மக்களைப் போலவே வாழ வேண்டும். இந்த எம். பி.க்கள் கொழும்புக்கு வரும் போது தொழிலாளர்களுடன், அல்லது கிளார்க்மார்களுடன் தங்கியிருக்க முடியாதா? தங்குவதற்கு இடம் வேண்டுமென விளம்பரம் செய்தால் இடம் கொடுப்பதற்கு பலர் முண்டியடித்துக் கொண்டு வருவார்கள். அவர்களுடன் தங்கும் கள் அவர்களுடன் தங்கும் செலவும் ''சிராவஸ்தி''யைப் போல் அதிகமிருக்காது.

எம். பி. மாரின் அலவன்ஸைக் கூட்டுவதற்கும், அவர்கள் கொழும்புக்கு வருபோது பெரும் மாளிகைகளில் வசிக்கச் செய்வதற்கும் எடுக்கப்படும் முயற்சிகள், தப்பித் தவறி நேர்மையான ஒருவர் பாராளுமன்றத்திற்குள் நுழைந்துவிட்டால் அவரை சீரழியச் செய்வதற்கும், அவ்ரை முதலாளித்துவமயமாக்குவதற்கும் கையாளப்படுகின்ற பாராளுமன்ற விளையாட்டாகும். இத்தகைய ஆடம்பரமான வாழ்க்கை, ஒருவரை உயர்ந்த சிந்தனையுடன் எளிய வாழ்க்கையைப் பயின்றுகொள்வதற்குப் பதிலாக, உயர்ந்த வாழ்க்கையையும் எளிய சிந்தனையையும் பயிலுமளவுக்குச் சீரழித்துவிடும். பல வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் நடத்துகின்ற விருந்துபசாரங்கள் ஒருவர் சீரழிவதற்குப் பெரிதும் உதவுகின்றன,

மக்கள் பிரதிநிதிகள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் இவர்கள் மக்களைப் போலவே வாழட்டும். சாதாரண வீடுகளில் வசித்து, ரயிலிலும், பஸ்ஸிலும் பிரயாணம் செய்யட்டும். சாதாரண கடைகளிலும் விடுதிகளிலும் உணவருந்தட்டும். அப்போதாவது மக்களின் பிரச்சினைகளை ஓரளவாவது அறிந்து கொள்வார்கள். இல்லாவிடில் தமக்கென்று, வீடோ, நிலமோ இல்லாத லட்சக்கணக்கான பொது மக்கள் ''சிராவஸ்தி'', ''ஸ்ரீமதிபாய''க்களுக்கு மட்டுமல்லாமல், பாராளுமன்றத்துக்கும் படையெடுத்துச் செல்லும் காலம் நிச்சயமாக வரும்.

மக்களின் இந்தக் கோபாவேசத்தை, ''மாட்சிமை தங்கிய'' மகாராணியின் சகல படைகளாலும் தடுத்தி நிறுத்தி அவர்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

## தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கு

# தோழர் சண் கடிதம்

இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் தலைவரான தோழர் சண்முகதாசன் தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கு சென்ற 26ம் திகதி பின்வரும் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

''எமக்கு போதிய முன்னறிவித்தல் கொடுக்காத காரணத்தினால் இம்மாதம் ஜூலை 27ம் திகதியன்று உங்களால் கூட்டப்படும் மகாநாட்டில் நாம் கலந்து கொள்ள முடியாதிருப்பதைத் தெரிவித்த எமது முன்னைய கடிதத்தைத் தொடர்ந்து இதனை எழுதுகின்றோம்.

எனினும் நீங்கள் ஆராய எண்ணியுள்ள விஷயங்கள் சம்பந்தமாக எங்களது கருத்துக்களைச் சுருக்கமாக முன்வைக்க நாம் விரும்புகின்றோம். தோட்டங்களிலேயே வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு உரிமைகள் சம்பந்தமாக நீங்கள் தயாரித்துள்ள நகல் சட்டத்தில் அடங்கியுள்ள ஆலோசனைகள் முற்று முழுக்க போதுமானதாக இல்லாதிருப்பதுடன், தோட்டத் தொழிலாளர்கள் எதிர்பார்த்திருந்தவற்றை முழுமையாக நிறைவேற்றவில்லை எனவும் நாம் கருதுகின்றோம்.

வாடகை செலுத்தப்படுகின்றதோ இல்லையோ, அல்லது வழங்கப்பட்டிருக்கும் இருப்பிடங்கள் முதலாளியின் காணிக்குள் இருக்கின்றதோ இல்லையோ என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல் தனது தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் வழங்கும் ஒரு முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயுள்ள உறவு, ஒரு நிலப்பிரபுவுக்கும், குடியிருப்பாளருக்கும் இடையே நிலவும் உறவு. எனவே, இந்த உறவு அமுலிலிருக்கும் சிவில் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமா இல்லையா என்பதுதான்

— 8ம் பக்கம் பார்க்க

நம்மைச் சுற்றி — நவம்

# விஸ்வமடுவில் இராணுவத்தினர் கைவரிசை

நாடு முழுவதும் உள்ள விவசாயப் படையினர் ஒரு மாத கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர். அப் படைக்குப் பதிலாக இராணுவம் அந்த முகாம்களை பொறுப்பேற்றுள்ளது. விசுவமடு விவசாயப்படை முகாமை இராணுவம் பொறுப்பேற்ற அன்று இரவு ரூ. 2,500 பெறுமதியான பொருட்கள் களவுபோய் விட்டனவாம். முதலாளித்துவ இராணுவத்தின் பாதுகாப்புத் திறமைகளில் இதுவும் ஒன்றுதான். இக் களவை சில கைதேர்ந்த அதிகாரிகள்தான் செய்திருக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

முத்தையன் கட்டு விவசாயப் படை முகாமில் இருந்து பொருட்களெல்லாம் அகற்றப்பட்டபின் அது தீயிடப்பட்டது. ''விவசாயப் படை'' என்ற பெயர் மாறி இந்த முகாம்கள் இலங்கை இராணுவப் பெயரைத் தாங்கி காட்சியளிக்கின்றது.

வாலிபர்களுக்கு காணி தருவோம்—சேவைக் காலம் முடிந்தவுடன் காணி தரப்படும் என்று கூறி விவசாயப் படையில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்ட வாலிபர்களைச் சேர்த்தார்கள். இன்று அவர்கள் நடுத் தெருவில் விடப்பட்டுள்ளார்கள்.

விசுவமடு முகாமில் குடியேறியுள்ள இராணுவத்தினர் அங்குள்ள கூலி விவசாயிகள் மீதும், மக்கள் மீதும் தமது கைவரிசைகளை காட்டத் தொடங்கியுள்ளனர். முன்னொரு தடவை விவசாயப் படை அதிகாரிகள் சிலர் தமது கைவரிசைகளைக் காட்டி இப் பகுதி மக்களிடம் அதற்கான பரிசையும் பெற்று அடங்கினார்கள் என்பது இப் புதிய வந்தேறிகளுக்குத் தெரியவில்லை போலும். இவர்கள் பெண்கள் மீது தமது கண்களையும், சேட்டைகளையும் கட்டவிழ்த்து விடுகின்றனராம். முதலாளித்துவ அடக்குமுறை அரசு இயந்திரத்தின் இராணுவத்திற்கு இதைத் தவிர வேறு என்னதான் தெரியும்.

இவைகள் எல்லாம் புதிய மக்கள் அரசாங்கத்தின் சாதனைகள் போலும்.

★

## திரிபுவாதிகளின் கேலிக் கூத்தை யு. என். பி. தலைவர் திறந்து வைத்தார்

அண்மையில் கெனமன் திரிபுவாதிகள் தமது பெயர் பலகை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மாநாடு என்ற ''தமாஷா''வை பண்டாரவளை நகரில் நடத்தினார்கள்.

இந்த ''தமாஷா''வுக்கு முதலாளித்துவப் பத்திரிகைகளில் பிரமாதமாக விளம்பரப்படுத்தி மலையகத்தில் மலையேறப் போகிறோம் என தம்பட்டம் அடித்தார்கள்- ஆனால், நடந்தது மலையடிவாரத்திலேயே உருண்டு விழுந்ததுதான்.

தாம் ஆட்சியில் தொங்கிக் கொண்டிருப்பதால் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றி விடலாம் என திரிபுவாதிகள் எண்ணினார்கள். ஆனால், தோட்டத் தொழிலாளர்கள் இந்த ''தமாஷா''வை உதறித் தள்ளியதன் மூலம் திரிபுவாதிகளின் முகத்தில் அறைந்துவிட்டார்கள்.

இந்த ''தமாஷா''வை திரு. லியனகே என்பவர் திறந்து வைத்தார். இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர் என்று எண்ணிவிட வேண்டாம். இவர் பக்கா யு. என். பிக்காரர். பண்டாரவளை நகராண்மைக் கழகத்தின் தலைவர். அதாவது, பண்டாரவளை நகராண்மைக் கழகத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் யு. என். பி. கட்சியின் தலைவர். இந்த யு. என். பி. பிரமுகர்தான், மகத்தான லெனின் நாமம் சூட்டப்பட்டிருந்த ''தமாஷா'' பந்தலைத் திறந்துவைத்தார். இதன் மூலம், உலக பாட்டாளி வர்க்கத்தின் மகோன்னதத் தலைவரும், ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவத்தின் ஜன்ம வைரியும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஆசானுமாகிய லெனின் அவர்களை அவமரியாதை செய்தனர். அத்தோடு தமக்கும் யு. என். பீக்குமிடையேயுள்ள ''சகஜீவ''னத்தைப் பிரகடனப்படுத்தினார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த ''பச்சைமாலை'' யு. என். பிக்காரருக்கு ''சிவப்பு மாலை''யை கழுத்தில் அணிவித்து கைதட்டி, ஆர்ப்பரித்துத் தமது மகிழ்வைத் தெரிவித்தும் கொண்டார்கள்.

இத் திரிபுவாத பீண்டங்கள் தாங்கள் அணியவேண்டிய பச்சை மாலைகளுக்குப் பதிலாக சிவப்பு மாலைகளைக் கழுத்தில் போட்டுக்கொண்டு இலங்கை மக்களையும், தொழிலாளி வர்க்கத்தையும் ஏமாற்றுவது போல், யு. என். பீக்கும் சிவப்பு மாலையைப் போட்டு தமது பரஸ்பர உறவை வெளிப்படுத்தியது. இது, இந்நாட்டு மக்களும், தொழிலாளி வர்க்கமும் கண்திறந்து பார்ப்பதற்கு உதவி செய்யுமாக. சிவப்பு மாலை அணிந்துகொண்டிருக்கும் இத் திரிபுவாத பச்சை மாலைகளுக்கு சீக்கிரமே இந்நாட்டு மக்களும், தொழிலாளி வர்க்கமும் பதிலளிக்கும்.

★

## நேற்றைய மழையில் முளைத்த காளான்கள்

பொதுத் தேர்தல் கேலிக் கூத்தின் திரை இறக்கப்பட்டதோடு, தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தரப் போவதாகக் கூறிக் கொள்ளும் பெயர்வைத்த, பெயர்வைக்காத பல ''முன்னணி''கள் திடீரெனத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. நேற்றுவரை அநாமதேயங்களாக மூலையில் பதுங்கிக் கிடந்த சில கும்பகர்ணன்களும், சந்தர்ப்பவாதிகளும், மாஜி பெடரல்வாதிகளும்தான் இந்த ''முன்னணி''களின் பிரமுகர்களாகத் தம்மைத்தாமே கூறிக் கொள்கிறார்கள்.

யு. என். பி. ஆட்சியால் வழங்கப்பட்ட ஜே. பி. பட்டத்தை சுமந்து கொண்டு, சட்டவிரோதமாக ''ரேஸ் புக்கி'' சூதாட்ட நிலையத்தை நடத்தும் ''பரோபகாரி'' தமிழர் ஒருவர் இந்த ''முன்னணி''களில் ஒன்றில் தான் பொறுப்புள்ளவர் எனக் கூறிக் கொள்கிறார். யு. என். பி. ஆட்சிக்கு பந்தம் பிடித்து செனட்டுக்கு முயற்சித்ததின் பலனாக ஜே. பி. பட்டம் கிடைத்தது; முக்கூட்டணி ஆட்சியில் எப்படியும் செனட்டர் பதவியை பெறத்தான் போகிறேன் என்று கூறி வருகிறாராம் இந் நபர்.

எது எப்படியிருந்தாலும், இந்த ''முன்னணி''கள் ஏதோ பெரும் போராட்டங்கள் செய்து தமிழர் உரிமைகளை நிலைநாட்டப் புறப்பட்டுள்ளன என அப்பாவித் தமிழர்கள் ஏமாந்துவிடக் கூடாது அல்லவா? அதற்காகவோ என்னவோ இந்த முன்னணியின் அநாமதேயங்கள் பத்திரிகைகளில் வெளியிடும் அறிக்கைகளில், நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வால்பிடிகள், முக்கூட்டணியின் தொங்கு சதைகள் என்பதை மறைமுகமாகப் பிரகடனப்படுத்துகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின், முக்கூட்டணி அரசாங்கத்தின் கால்களில் தெண்டனிட்டு வணங்கி, கால்பிடித்து, கைபிடித்து தமிழர்களின் உரிமைகளை இந்த ''முன்னணி''கள் பெறமுடியாவிட்டாலும் கூட, தமிழர்களின் உரிமைகள் எக்கேடு கெட்டாலும்கூட, இந்த முன்னணியுள்ள அநாமதேயங்கள் தமது சொந்த தேவைகளை, லாபங்களை, வாய்ப்புகளை எப்படியும் பெற்றுவிட முயலுவார்கள் என்பதை மட்டும் சந்தேகத்திற்கு இடமின்றி கூறலாம்.

★

## சீன துணியைப் பற்றி ஓர் அதிகாரியின் விளக்கம்

சீனாவிலிருந்து துணிவகைகளை 1 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு இறக்குமதி செய்வதற்கு மூன்று பிரதான காரணங்கள் உள்ளதாக இலங்கை உள்நாட்டு, வெளிநாட்டு அமைச்சின் உயர்தர அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். அவர் கூறிய மூன்று காரணங்கள்: முதலாவது, விலைகள் மிகவும் மலிவு. இரண்டாவது, குறுகிய காலத்தில் ஒரே நேரத்தில் பெருந்தொகையான துணிகளை வாங்க முடியும். மூன்றாவது, குறித்த நேரத்தில் தவறாது பொருட்களை அனுப்பிவைக்கும்.

இதிலிருந்து சோஷலிஸ அமைப்பு எத்தகைய மகத்தானது என்பது புரியும். ஏகாதிபத்திய, முதலாளித்துவ, திரிபுவாத நாடுகள் மற்றைய நாடுகளுடனான ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியாமல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் வேளையில், சீனாவின் நிலைமைகள் மேலும் சிறப்படைந்து வருகின்றன. இதை இன்று முற்போக்கு சக்திகள் மாத்திரமல்ல, பிற்போக்கு சக்திகளும் வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொள்கின்றன.

தலைவர் மாஓவினதும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சரியான தலைமையும், சோஷலிஸ அமைப்பும் பின்தங்கிய நாடுகளுக்கு தன்னலமற்ற உதவியளிப்பதையிட்டு, இலங்கை மக்களும், உலக மக்களும் சந்தோஷமடையாமல் இருக்க முடியாது.

## ஆனையிறவு உப்பளத்தில் உயர் அதிகாரி மீண்டும் வாலாட்டுகிறார்

ஆனையிறவு உப்பளத்தில் 'கடமையாற்றும்' உற்பத்தி அதிகாரி அனைவருக்கும் 'பிரபல்யமான' ஒருவர். சென்ற வருடம் தன்னுடைய வீட்டில் காணாமல்போன துப்பாக்கி சம்பந்தமாக ஞானப்பிரகாசம் என்ற தொழிலாளி ஒருவரை (இவர் சி. டி. யூ. எப்புடன் இணைந்துள்ள இலங்கை உப்புத் தொழிலாளர் சங்க அங்கத்தவர்) பொலிஸுக்குக் கொண்டு சென்று சித்திரவதைக்குள்ளாக்கிய சிறுமை இவருக்குண்டு. இக் கொடுமையை எதிர்த்து முழுத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்கியதும், குறிப்பிட்ட அதிகாரி கட்டாய லீவில் அனுப்பப்பட்டதும் அனைவரும் அறிந்ததே. மேற்படி விஷயம் சம்பந்தமாக ஞானப்பிரகாசம் மீது வழக்கும் தொடரப்பட்டிருந்தது.

தோழர் ஞானப்பிரகாசம் மீதுள்ள குற்றத்தை நிரூபிக்க முடியாத அதிகாரியும், பொலிஸும் மூக்குடைபட்டனர். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி பிரச்சினையில் மூக்குடைப்பட்ட இந்த உயர் அதிகாரி இப்பொழுது, தொழிலாளர்கள் மத்தியிலுள்ள விரல்விட்டெண்ணக் கூடிய பழைய, புதிய துரோகிகளின் உதவியுடன் தொழிலாளர்கள் மீது கொடிய அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனராம். இவருடைய சர்வாதிகார நடவடிக்கைகளுக்கெல்லாம் உதவியாக இது நாள்வரை தொழிலாளர்கள் பக்கம் நிற்பதாகப் பாசாங்கு செய்து, இன்று சுரண்டும் கொடிய அதிகாரிகள் பக்கம் சேர்ந்துள்ள துரோகி ஒருவர் உடந்தையாக உள்ளார் எனத் தொழிலாளர்கள் பேசிக்கொள்கிறார்கள். வேலைநிறுத்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற வாலிபத் தொழிலாளர்கள்மீது இந்த உயர் அதிகாரி பன்மடங்கு அடக்குமுறை நடத்துவதாக கூறப்படுகிறது. இவருடையதும், இவருடைய கூட்டாளிகளான தொழிலாளி வர்க்கத் துரோகிகளினதும் காட்டுமிராண்டித் தனங்களுக்கு எதிராகப் போராடுவதற்கு தொழிலாளர்கள் தயாராகி வருகின்றார்கள்.

இந்த உயர் அதிகாரி தொடர்ச்சியாக, தனது அடக்குமுறைகளை கையாண்டு வருகிறார். பீட்டர் கெனமனும், என். எம். பெரேராவும் மற்றும் துரோகிகளும் புளுகித் திரியும் மக்கள் சோஷலிச அரசாங்கத்தின் கீழும்கூட அவருடைய அடக்குமுறைகள் மேலும் அதிகரித்து வருகிறது. அதுவும் தொழிலாளர்களின் கட்சி என்று வேஷம் போடும் சமசமாஜ கட்சியின் அங்கத்தவரான அ. விசுவநாதன் உப்புக் கூட்டுத்தாபனத்தின் டைரக்டர்கள் சபையில் ஒருவராக நியமனம் பெற்ற பின்னும் இத்தகைய கொடுமைகளிலிருந்து தொழிலாளர்களுக்கு மீட்சி கிடைக்கவில்லை.

# தேவை, மக்கள் கமிட்டிகளல்ல

# மக்களுக்கு அதிகாரமே

ஆட்சி நிர்வாகத்தை ஜனநாயகப்படுத்துவதற்காக மக்கள் கமிட்டிகள் அமைப்பது பற்றி முக்கூட்டணியினர் கடந்த பொதுத் தேர்தலின் போது பிரமாதப்படுத்தினுர்கள். இதை எதிர்த்து யு. என். பி. மரணபீதியுடன் பயங்கரமாகக் கூச்சலிட்டது. இது ஜனநாயகத்துக்கு ஆபத்து; ஸ்தலஸ்தாபன நிர்வாக முறையை ஒழித்துவிடும் என்றெல்லாம் நாட்டு மக்களுக்கு அபாய அறிவிப்பு செய்தது யு. என். பி.

இப்போது, இதைப்பற்றி யு. என். பி. பீதி கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது. மக்கள் கமிட்டிபற்றி யு. என். பி.க்கு கடுகளவு பீதியிருந்தாலும்கூட அதையும் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா விடுத்துள்ள அறிக்கை இல்லாமல் செய்திருக்கும். இதைப்பார்க்கும்போது, கடந்த மே, 28 திகதி ''தொழிலாளி'' இதழில் ''ஜனநாயகத்துக்துக்கு ஆபத்து?'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் நாம் குறிப்பிட்டிருந்ததுபோலவே இப்போது கூறப்படும் மக்கள் கமிட்டிகள் எவ்வித ஆபத்தையும் விளைவிக்காதவை.

## அமைச்சரின் முடிவு இறுதியானதாம்

இந்த மக்கள்கமிட்டிகள் பிரதேசவாரியாக நியமிக்கப்படுமாம். இதற்கு அரசாங்கக் கட்சிகளின் பிரதேச கிளைகளிலிருந்தும், பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவாளர்களிலிருந்தும், தமக்குத் தேவையானவர்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்களாம். எனினும், அமைச்சரின் தீர்மானமே முடிவானதாக இருக்கும். இக் கமிட்டிகளின் தலைவர்களையும் அமைச்சரே நியமிப்பாராம்.

தமக்கு பெரும் அனுகூலம் பெறுவதற்கு வழி அமைத்துக் கொள்வதற்கு அமைச்சர் நல்ல சூழ்நிலையை இதன் மூலம் சிருஷ்டிக்கிருர். இருப்பினும், இக் கமிட்டிகளுக்கு உள்ள அதிகாரங்கள் என்ன? இக் கேள்வி மிக முக்கியமானதாகும். அமைச்சரின் அறிக்கையை கவனத்துடன பரிசீலனை செய்தால் இக் கமிட்டிகளுக்கு சட்டம் இயற்றும், நீதிபரிபாலன, நிர்வாக அதிகாரங்கள் எதுவுமே இல்லையென்பது தெளிவாகும். இது மிகத் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இடிதாங்கிகள்

இக் கமிட்டிளுககுக்கு எந்தவித அதிகாரமும் இல்லையென்ருல் வேறு என்னதான் உள்ளது? பார்வைக்கு பரிசீலனை நடத்துவதற்கும், சிபார்சு செய்வதற்கும் அதிகாரம் இருப்பது போல் தெரியும். ஆனுல், இவை தன்மையில் ஆலோசனை கூறும் கமிட்டிகளாகவே அமையும். நடைமுறையிலுள்ள முதலாளித்துவ நிர்வாகத்தின் வால்களாகத் தொங்கும். அரசாங்கத்தின் அரசு இயந்திரத்திற்கும், மக்களுக்கும் மத்தியில் இடி தாங்கிகளாக இருக்கும். மக்களுடைய கோரிக்கைகளை ஆட்சியினரிடம் கொண்டு செல்லவும் அவை நிறைவேற்றப்படாததற்கு ஆட்சியினர் கூறும் காரணங்களை மக்களிடம் எடுத்துக் கூறவுமான ஸ்தாபனங்களாகவே இக் கமிட்டிகள் செயல்படும்.

எந்தவொரு சமூக அமைப்பினதும் உண்மையான அதிகாரம் அரசு இயந்திரத்திலும், பிரதானமாக ஆயுதப் படைகளிலும் தங்கி அதிகார வர்க்கத்தின் காவல் நாயாக செயல்படுகிறது. இலங்கையில் அந்நிய ஏகாதிபத்தியம், நிலப் பிரபுத்துவம், தரகு முதலாளித்துவம் ஆகியன அதிகார வர்க்கமாக உள்ளன என்பதை நாம் அடிக்கடி சுட்டிக் காட்டி வருகிருேம்.

அடக்குமுறை முதலாளித்துவ அரசு இயந்திரத்தை பலாத்காரமாக நொறுக்கித் தள்ளாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, மார்க்சிஸம் - லெனினிஸம் கூறும் பாட்டாளி வர்க்க அரசு இயந்திரத்தை ஸ்தாபிக்காமல் இந்த மக்கள் கமிட்டிகளினுல் நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் மக்கள் பங்குபற்றிக் கொள்ளலாம் என்பது பச்சைப் பொய்யாகும். இது மக்களை ஏமாற்றும் தகிடுதத்தமாகும்.

அதுமட்டுமல்ல, இலங்கையிலுள்ளதுபோல, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, சக்திகளின் கைகளில் உற்பத்தி சாதனங்கள் உள்ளவரை, தமது நோக்கங்களுக்கு பொருந்தாத எந்தவொரு நிர்வாக அமைப்பையும் ஊழல்படுத்தவும், சீர்குலைக்கவும் வாய்ப்புகள் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, சக்திகளுக்கு உண்டு என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## ஊழல்கள்

இதற்கான உதாரணங்களை அண்மைச் சம்பவங்களில் காணலாம். முக்கூட்டணியின் தேர்தல் வெற்றி ஆர்ப்பரிப்புக்கிடையே பல இ. போ. ச. டிப்போக்களில் மக்கள் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. யு. என். பி.யின் ஆதரவாளர்களாகவிருந்த அதிகாரிகள் பலர் பலாத்காரமாக கட்டாய லீவில் அனுப்பப்பட்டார்கள். அதற்குப் பின் நடந்தது என்ன? இதைப் பற்றி ஒருவர் அழகாகக் கூறினுர். முன்பு இ. போ. ச. தொழிலாளர்கள் அதிகாரிகளைக் காணச் சென்ருல் கைகளில் மதுபான போத்தல்களுடன்தான் செல்ல வேண்டியிருந்தது; இப்போது, மக்கள் கமிட்டியின் தலைவரை அந்த அதிகாரிகள் மதுபான போத்தல்களுடன் காணச் செல்கின்றனர். இந்த முறையில் ''விலக்கப்பட்ட'' இ. போ. ச. அதிகாரிகள் பலர் மீண்டும் தமது வேலைகளைப் பெற்றுள்ளார்கள், முதலாளித்துவ அமைப்பில் இத்தகைய ஊழல்கள் தடைசெய்யப்பட முடியாதவையாகும். ஊழல் முதலாளித்துவத்தின் உடன் பிறப்பாகும்.

மேலும், இக் கமிட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பொறுப்பற்ற தன்மையும் இதற்கு ஒரு காரணமாகும். இவர்களின் தரம் குறைந்த அரசியல் உணர்வும், இந்த நியமனங்கள் தாம், ஆளும் கட்சிக்கு செய்த சேவைக்காகக் கிடைத்தன என இவர்கள் கருதுவதுமாகும். கொழும்பைச் சுற்றியுள்ள இ. போ. ச. பெரிய டிப்போ ஒன்றில் 40 நபர்களைக்கொண்ட மக்கள் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இந்த 40 தொழிலாளர்களும் தமது வேலைகளைச் செய்வதில்லை. பைல்களைத் தூக்கிக் கொண்டு இங்குமங்கும் திரிந்து கொண்டேயிருந்தனர். இதற்கு 8 மணித்தியால வேலை நேர சம்பளமும், 4 மணித்தியால ஓவர்டைம் சம்பளமும் கிடைத்தன. இவை யாவும் இதர தொழிலாளர்கள் உழைத்துச் சிந்தும் வியர்வைத் துளிகளால் கிடைக்கின்றன. இங்கு நடந்தது என்னவென்ருல் பழைய அதிகார வர்க்கத்தின் இடத்தில் புதிய அதிகார வர்க்கம் அமர்ந்தது தான். இந்த புதிய கோஷ்டி மலிவான விலையில் ஊழல்களுக்கு உட்படுபவர்கள்.

## சீர்குலைவுக்கு பயன்படுத்துகின்றனர்

கொழும்பில் ஒரு சினிமா தியேட்டரின் பிரதம நிர்வாகி தான் தெரிவு செய்த மக்கள் கமிட்டியைப்பற்றிய அறிவித்தலை தியேட்டரில் ஒட்டியிருந்தார். இந்த மக்கள் கமிட்டியின் மூலம் தனக்கு பிடித்தமில்லாத தொழிற் சங்கத்தை சீர்குலைக்க முயன்ருர். ஆனுல், அத் தியேட்டர் தொழிலாளிகள் இந்த தந்திரத்துக்கு ஏமாருமல் உதறித் தள்ளிவிட்டார்கள்.

சில கூட்டுத்தாபன அதிகாரிகள் தொழிலாளர்களை வேலையை விட்டு விலக்கும் தமது பழிவாங்கும் கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கு மக்கள் கமிட்டிகளை பயன் படுத்தினுர்கள். தொழிலாளர்களிடையே ஒருவருக்கொருவரை மோத விடவும், தொழிற்சங்க இயக்கங்களை பலவீனப்படுத்தவும் இது நல்லதோர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மக்கள் கமிட்டிகள் அமைக்கும் ஆலோசனை மக்களுக்கு அதிகாரம் தரப்படுவதாகக் கூறிக் கொண்டே உண்மையான அதிகாரத்தை மக்களுக்குக் கொடுக்காமல் தட்டிக் கழிக்கும் நோக்கமாயுள்ளது. மறுபக்கத்தில், வெகுஜன ஸ்தாபனங்களை சீர்குலைக்கவும் அல்லது தமக்கு ஆபத்தில்லாத ஸ்தாபனங்களாக முடமாக்கவும் முயல்கிறது. இது தேசிய ரீதியில் மக்கள் கண்களில் மண் தூவப்பார்க்கிறது.

மக்களால் கேட்கப்பட வேண்டியது மக்கள் கமிட்டிகள் அல்ல; மக்களின் கைகளில் அதிகாரம் வேண்டும் என்பதே. எனினும், புரட்சிகரப் போராட்டங்களினுல் மட்டுமே மக்கள் இதை வென்றெடுக்க முடியும்.

# யாழ்ப்பாணத்தில் நிலப்பிரபுத்துவ பிற்போக்கை ஒழிக்க

# இறுதிவரை போராடுங்கள்

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவல்

இவ்வருடமும், மாவிட்டபுரம் ஆலயத்தினுள் தாழ்த்தப்பட்ட மக்களை உட்பிரவேசிக்க அனுமதிக்காமலேயே திருவிழாக்கள் முடிவடைந்துள்ளன. உயர்சாதி எனக் கூறிக் கொள்ளப்படுவோர் தாம் நினைத்ததை மீண்டும் சாதித்துள்ளார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமூக சமத்துவம் பெற்றுத் தருவோம் என உறுதியளித்த புதிய அரசாங்கம் கடந்த மே மாதத்தில் ஆட்சிபீடமேறிற்று. இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கெனமன் திரிபுவாத கும்பல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பலப் பல வாக்குறுதிகளை அளித்தது. இத் திரிபுவாத கும்பலைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் ஒருவர் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவராக்கப்பட்டுள்ளார். இவையெல்லாம், இம்முறை மாவிட்டபுர ஆலயத்தின் கதவுகளை திறக்கச் செய்யும் என தாழ்த்தப்பட்ட மக்களை எதிர்பார்க்கச் செய்தன.

அம் மக்கள், பொலிஸின் கபட நாடகத்தையும், சி. சுந்தரலிங்கத்தின் தலைமையிலுள்ள பிடிவாதமான, படுபிற்போக்கு குறும்சங்கள் கொண்ட உயர்சாதி எனக் கூறிக் கொள்ளும் சிறு கும்பலையும் கணக்கில் எடுக்காமலேயே இதை எதிர்பார்த்தனர். ஆனுல், உயர்சாதியினர் எனப்படுவோரில் கணிசமான தொகையினர் உட்பட தமிழ் மக்கள் மத்தியில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் பரந்த அளவு செல்வாக்கை பெற்றுள்ளபோதிலும், விடாக்கண்டர்களான, இச் சிறு பிற்போக்குக் கும்பல் மறுமுறையும் மக்களின் எண்ணத்திற்கும் நிர்ப்பந்தத்திற்கும் அடிபணிய மறுத்து விட்டது.

இப் பிற்போக்கு கும்பல்களின் நடவடிக்கைகளுக்கு இரட்டை வேஷக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் பொலிஸ்படை உதவியளித்தது. யாழ்ப்பாணப் பொலிஸார் வழமைபோல் தமது பாத்திரத்தை வகித்தனர். அவர்கள் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டினுர்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத்தான் தாம் ஆலய வாசலில் நிற்கின்ருேமென்ற எண்ணத்தை அவர்கள் முதலில் ஏற்படுத்திவிட்டு—ஆலயத்தின் உட்பிரகார வாசலை திறப்பதற்கு சக்தியற்றவர்களாக இருந்துவிட்டு—சுந்தரலிங்கத்தின் பிற்போக்கு கும்பலுக்குப் பயந்து அவர்கள் பின்வாங்கினுர்கள். பூட்டிய கதவுக்குள் பூசைகள் செய்யப்படுவதை அனுமதித்ததுமல்லாமல், ஆலயத்திற்கு வெளியே இருந்ததாழ்த்தப்பட்ட மக்கள்மீது பலாத்காரம் பாவிப்போம் என்ற சுந்தரலிங்கத்தின் கும்பலின் பயமுறுத்தலுக்கும் அவர்கள் பயந்து பின்வாங்கி விட்டார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு, பெண்கள் அவமானப்படுத்தப்படும்போது, குறிப்பிடத்தக்க முறையில் நீண்ட நேரத்திற்கு பொலிஸ் அங்கு இருக்கவில்லை. இது, எந்தவொரு முதலாளித்துவ அரசிலும், பொலிஸ் படை பிற்போக்கின் காவல் நாயாகவே நடந்து கொள்கிறது; பாராளுமன்ற அமைப்பிற்குள் அரசாங்க மாற்றங்கள் ஏற்பட்டாலும், ஆயுதப்படைகளை பிரதானமாகக் கொண்டுள்ள அரசு இயந்திரத்தின் அடக்குமுறைத் தன்மை மாருது என்ற எமது கொள்கையை நிரூபித்துள்ளது.

சாதிமுறையும், மனிதனுக்கு மனிதன் இழைக்கும் படுமோசமான அநீதிகளையும் கொண்ட தீண்டாமையும் இன்றைய சமுதாயத்தில் இடம்பெற முடியாத நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களாகும். இவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கின்ருேம். மேலும், ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும் போன்று நிலப்பிரபுத்துவத்தையும், சமாதான முறைகளினுலோ, பாராளுமன்றத்தினுலோ அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் ஒருவருக்கு பாராளுமன்றத்தில் நியமனம் கிடைப்பதாலோ ஒழித்துவிட முடியாது என்று நாம் ஆணித்தரமாகக் கூறுகிருேம்.

நிலப்பிரபுத்துவத்தை, புரட்சிகரப் போராட்டத்தின் மூலமும், சமுதாயத்தில் புரட்சிகர மாற்றம் செய்வதன் மூலமும், பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் புரட்சிகர அரசாங்கத்தை அமைப்பதன் மூலமுமே அழித்தொழிக்க முடியும். இந்த உன்னதமான குறிக்கோளை அடைவதற்காக முற்போக்கும், நல்லெண்ணமும் கொண்ட சகலபகுதி தமிழ் மக்களையும் ஐக்கியப்படும்படி நாம் கேட்டுக்கொள்கிருேம். சுந்தரலிங்கத்தின் தலைமையிலுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய நிலப்பிரபுத்துவ படுபிற்போக்குவாதிகளை —

8-ம் பக்கம் பார்க்க

தொழிலாளி

# கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்...
# பகுதியினராக இருத்தல் வேண்...

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உலகம் முழுவதிலுமுள்ள மக்களின் போராட்டம் வீறுநடை போட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி வெற்றியுடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது. கட்சியை கட்டி வளர்ப்பதற்கான, அதனை ஸ்திரப்படுத்துவதற்கான இயக்கம் பரந்த அளவில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இக் காலகட்டத்தில் கட்சித் தோழர்களும், முழுச் சீன மக்களும் தமது மகத்தான புகழ்பூத்த சரியான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 49வது ஆண்டு நிறைவு விழாவை வெற்றிப் பெருமிதத்துடன் கொண்டாடுகிறார்கள்.

புரட்சிப் புயல் வீசிய அரை நூற்றுண்டுக் காலத்தில் தலைவர் மாசேதுங்கினால் வளர்த்தெடுத்து தலைமை தாங்கப்படும் சீன கம்யூனிஸ்ட் கட்சி உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள எதிரிகளுக்கு எதிராக நீண்ட நாள் போராட்டத்தை நடத்தியுள்ளது. வெகுஜனங்களை ஆயுதபாணிகளாக்கி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்திரப்படுத்துவதிலும் வெற்றிமேல் வெற்றியை அது ஈட்டி வந்துள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சி கடந்துவந்த மகத்தான போராட்டப் பாதையை நாம் பார்க்கும் போது, அது தொழிலாளி வர்க்கத்தினதும், முழு நாட்டிலுள்ள புரட்சிகர மக்களினதும் தலைமைக் கேந்திரம் என்று கூறப்படுவதற்குத் தகுதியாக இருக்கின்றது. அது மட்டுமல்ல, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், சமூக ஏகாதிபத்தியம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நவீன திரிபுவாதத்திற்கு எதிராகவும், சகல பிற்போக்கு சக்திகளுக்கு எதிராகவும் நமது காலகட்டத்தில் சர்வதேச பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தில் அது அதிர்ச்சிப் படையாகவும் விளங்குகின்றது.

''கட்சி ஸ்தாபனம் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினரைக் கொண்டதாக இருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கமும் புரட்சிகர வெகுஜனங்களும் தமது வர்க்க எதிரிகளுக்கு எதிராக நடத்தும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய தீவிரமான முன்னணி ஸ்தாபனமாக அது இருக்க வேண்டும்'' என தலைவர் மாஓ கூறியுள்ளார். கட்சியைக் கட்டிவளர்ப்பதற்கும் அதனை ஸ்திரப்படுத்துவதற்குமான இயக்கம், பாட்டாளி வர்க்கத்தின் நமது புரட்சிகர முன்னணிப் படையைக் கட்டி வளர்ப்பதற்கும், பழுதானவைகளை அகற்றிவிட்டு புதியவற்றை எடுப்பதற்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு சகல மட்டங்களிலும் கட்சி ஸ்தாபனங்களை போராட்டப் பாசறைகளாகப் பலப்படுத்துவதற்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு பரந்துபட்ட வெகுஜன கட்சி அங்கத்தவர்களை முன்னேறிய பகுதியினராக்குவதற்காக அவர்களை மேலும் புடம் போட்டு எடுப்பதற்கும் நடத்தப்படும் இயக்கமேயாகும்.

## ஐந்து தகுதிகள்

பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினருக்கு இருக்க



வேண்டிய தகுதிகள் யாவை? கீழேயுள்ள ஐந்து தகுதிகளும் தலைவர் மாஓவினால் விளக்கிக் கூறப்பட்டுள்ளதோடு, இவை கட்சியின் 9வது மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சியின் புதிய சட்டதிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இவற்றை கட்சி அங்கத்தவர்கள் கடைப்பிடித்தல் வேண்டும்.

## முதலாவது தகுதி

மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையை வாழும் முறையில் படித்து வாழும் முறையில் பயன்படுத்துதல் வேண்டும். இதுவே முதலாவது தகுதி. இது எமது சிந்தனையின் வழிகாட்டியையும், எமது அரசியல் மார்க்கத்தையும் குறிப்பிடுகின்றது. ''மார்க்சிஸம்-லெனினிஸத்தைக் கிரகித்துக் கொள்வதற்கு ஊழியர்கள் பயிற்றப்படுதல் வேண்டும். அதில் கூடுதலானவற்றை அவர்கள் இரகித்துக்கொண்டார்களேயானல் அது மிகவும் சிறந்ததாகும். இதன் அர்த்தம் யாதெனில், அவர்கள் மார்க்சிஸம்-லெனினிஸத்தை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். திரிபுவாதத்தை அல்ல.'' என தலைவர் மாஓ கூறியுள்ளார். மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையை வாழும் முறையில் படித்து வாழும் முறையில் பிரயோகிப்பதன் மூலமே பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினர் மேலும், முதிர்ச்சி அடைய முடியும். புதிய கட்சித் தோழர்களும், கட்சியில் சேர விரும்புகின்றவர்களும் மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையைக் கற்றல் வேண்டும். பழைய கட்சித் தோழர்களும் இதனைச் செய்தல் வேண்டும். குறிப்பாக சகல மட்டங்களிலுமுள்ள முன்னணி ஊழியர்கள் இதனை உணர்வு பூர்வமாகவும், சிரத்தையுடனும் கற்றல் வேண்டும். தாம் கற்றதை அவர்கள் நடைமுறைப்படுத்தல் வேண்டும். புரட்சி செய்தல்; வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துதல்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமுல்படுத்துதல். மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையின் சாராம்சம் இதுதான். வாழும் முறையில் நடைமுறைப்படுத்துதல் என்றால் என்ன? தத்துவத்தை நடைமுறையுடன் இணைத்தல்; தலைவர் மாஓவின் பாட்டாளி வர்க்க புரட்சிகர மார்க்கத்தையும், சோஷலிஸப் புரட்சி சோஷலிஸ நிர்மாணம் ஆகியவற்றின் போது அவர் விடுக்கின்ற பொதுவான குறிப்பிட்ட கொள்கைகளையும், இறுக்கமாகக் கடைப்பிடித்து, வர்க்க எதிரிக்கு எதிராகவும், ''இடதுசாரி,'' வலதுசாரி திசை மாற்றங்களுக்கு எதிராகவும் ஒருவரின் சிந்தனையிலுள்ள பாட்டாளி வர்க்கத்திற்குப் புறம்பான சிந்தனைகளுக்கு எதிராகவும் போராடத் துணிதலும்தான் இதன் அர்த்தமாகும்.

## இரண்டாவது தகுதி

சீனவிலும், உலகத்திலுமுள்ள பெரும்பான்மையான மக்களின் நலன்களுக்கு கடமை ஆற்றல் வேண்டும். இது இரண்டாவது தகுதியாகும். ''மக்களின் பெரும்பான்மையோரினதும், சீனவிலுள்ள பெரும்பான்மையான மக்களினதும், உலகத்திலுள்ள பெரும்பான்மையான மக்களினதும் நலன்களுக்கு நாம் கடமையாற்றல் வேண்டும். சிறு தொகையானநபர்களுக்கு, சுரண்டும் வர்க்கங்களுக்கு, முதலாளி வர்க்கத்துக்கு, நிலப்பிரபுக்களுக்கு, பணக்கார விவசாயிகளுக்கு, எதிர்ப் புரட்சியாளர்களுக்கு, தீய சக்திகளுக்கு அல்லது வலதுசாரிகளுக்கு நாம் கடமை ஆற்றுதல் கூடாது'' என தலைவர் மாஓ கூறுகின்றார். பெரும்பான்மையான மக்களின் நலன்களுக்கு கடமை ஆற்றுவதற்கு கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துதல் வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் கால்வருடிகளையும் தூக்கி எறிதல் வேண்டும். முதலாளி வர்க்கத்தையும் ஏனைய சுரண்டல் வர்க்கங்களையும் தூக்கி எறிவதற்கும், முழு மனித குலத்தின் விமோசனத்திற்காகவும் தமது சக்தியின் ஒவ்வொரு துளியையும் செலவிடுதல் வேண்டும். தமது உயிரை அர்ப்பணிப்பதற்கும் அவர்கள் தயாராக இருத்தல் வேண்டும். மக்களுக்கு சேவை செய்வதாக சிலர் கூறிக் கொள்வார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் தமது குறுகிய நலன்களுக்காக; தமது சிறிய குழுக்களுக்காக, தமக்காகவே வாழ்கின்றார்கள். இத்தகையவர்கள் உண்மையான கம்யூனிஸ்டுகள் அல்ல. இத்தகைய நபர்கள் முன்னணி அங்கங்களில் அங்கம் வகிக்கவிடப்படுதல் ஆகாது. அவர்கள் எவற்றிற்கும் தலைமை தாங்க விடப்படுதல் ஆகாது.

## மூன்றாவது தகுதி

ஒருவர் தவறாக தம்மை எதிர்த்தபோதிலும், நேர்மையாக தன்து தவறுகளை திருத்திக் கொள்பவர்கள் உட்பட பெரும்பான்மையினரோடு தம்மை ஐக்கியப்படுத்துதல் மூன்றாவது தகுதியாகும். பதவி வேட்டைக்காரர்கள், சதிகாரர்கள், இரட்டை வேடதாரிகள் ஆகியோர்மீது மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். இத்தகைய தீய சக்திகள் கட்சியினதும், அரசினதும் தலைமைப் பீடத்தை எந்த மட்டத்திலாவது அபகரிப்பதை தடுத்து நிறுத்துதல் வேண்டும். கட்சியினதும், அரசினதும் தலைமைப்பீடம் எப்போதும் மார்க்சிஸப் புரட்சிவாதிகளின் கைகளில் இருப்பதை உத்தரவாதம் செய்தல் வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக பெரும்பான்மையினரோடு ஐக்கியப்படுதல் வேண்டும். தீய சக்திகள் கட்சியினதும், அரசினதும் தலைமைப் பீடத்தை எந்த மட்டத்திலாவது அபகரித்துக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

''வெகுஜனங்களுடன், வெகுஜன ஊழியர்களுடன் ஐக்கியப்படுதல், இரு பகுதியினரிலும் 95 சத விகிதத்தினருடன் ஐக்கியப்படுதல் அத்தியாவசியமாகும்'' என தலைவர் மாஓ கூறுகின்றார். கம்யூனிஸ்டுகள் குறிப்பாக கட்சியின் முன்னணி ஊழியர்கள், பாட்டாளி வர்க்க பரந்த மனப்பான்மையுடையவர்களாக இருத்தல் வேண்டும். அவர்கள் குறுகிய மனப்பான்மையுடையவர்க...

---

## திரிபுவாதம் - சுய...

சோவியத் திரிபுவாதிகள் சமீபத்தில் ''ஜப்பானிய விவகார நிபுணன்'' எனப்படும் ட்மிற்றி பெற்ரேவ் என்பவனை டோக்கியோவிற்கு அனுப்பி இருந்தனர். அங்கு அவன் நிகழ்த்திய ஒரு உரையில் சோவியத் யூனியனும், ஜப்பானும் ஆசியாவில் தங்களின் பொது எதிரி எனக் கருதுபவர்களுக்கு எதிராக தமது கூட்டுறவை சகல விதத்திலும் உறுதிப்படுத்த வேண்டும் என்பது பற்றி குறிப்பாகப் பேசினன்.

பொது எதிரிகள்......?-சீன, கொரிய, வியட்நாம் மற்றும் ஆசியாவிலுள்ள புரட்சிகர மக்கள்தான் இவர்களின் பொது எதிரிகள். ஜப்பானிய பிற்போக்குவாதிகளுடன் அவன் நடத்திய அந்த இதயங் கலந்த பேச்சு மிக அப்பட்டமாக இருந்தபடியால் சோவியத் திரிபுவாதிகளின் துரோகக் குணம்சங்களை எடுத்துக் காட்டுவதற்கு அவ்வளவு அவசியமில்லாமல் இருக்கிறது. திரிபுவாதிகளின் விவாதத்தின்படி. ''உலகில் ஆசியாதான் மிகவும் அபாயம் நிறைந்த பிரதேசம்''. ''இங்குதான் உலகத்திலுள்ள நான்கு பிரிக்கப்பட்ட தேசங்களில் மூன்று'' அடங்கியுள்ளன. இவை, சீனவும்-தாய்வானும்; கொரியாவும்-வடகொரியாவும்; தென் வியட்

# ...வர்க்கத்தின் முன்னேறிய ...ண்டும்

...ளாக இருத்தல் ஆகாது. பொது நலன்களை அவர்கள் மனதில் கொள்ளல் வேண்டும். முழு நிலைமையும் அவர்களது சிந்தனையில் இருத்தல் வேண்டும். 'மக்கள் மாறலாம்' என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ''தவறிழைத்தவர்கள் தம்மைத் திருத்திக்கொள்வதற்கு நாம் உதவி புரிதல் வேண்டும். அவர்கள் தமது தவறுகளை திருத்திக் கொள்வதற்கும், உதவி புரிதல் வேண்டும். ஒருவர் தமது தவறுகளை உணர்வு பூர்வமாகத் திருத்திக்கொண்டாரேயானால் முடிவில்லாமல் அவரை நாம் விமர்சித்துக் கொண்டே இருத்தல் ஆகாது.''

## நான்காவது தகுதி

தேவையானபோது வெகுஜனங்களைக் கலந்தாலோசித்தல் வேண்டும் இது நான்காவது தகுதியாகும். ''கம்யூனிஸ்டுகள் ஜனநாயக வேலைப்பாணியை கைக்கொள்ளுதல் வேண்டும். எதேச்சாதிகார முறையைக் கைக்கொள்ளுதல் ஆகாது.'' ''தேவையானபோது தோழர்களுடன் கலந்தாலோசியுங்கள். பூரணமான விவாதத்தை நடத்துங்கள். வெவ்வேறான கருத்துக்களுக்கு செவிசாயுங்கள். மாறுபட்ட கருத்து கொண்டவர் கூட தனது கருத்தை வெளியிட அனுமதியுங்கள்.'' 'மக்கள் தாம் விரும்பியதை சொல்வதற்கு அனுமதித்தல்' என்ற கொள்கையை நாம் நடைமுறைப்படுத்துதல் வேண்டும். 'நான் சொல்வதுதான் சட்டம்' என்ற கொள்கையை நாம் எதிர்த்தல் வேண்டும். ''கூட்டத்தில் ஆம் என்று கூறிவிட்டு, பின்னர் இல்லையென்று கூறுகிறீர்கள்.'' கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களின் மாணவர்களாயிருத்தல் வேண்டும். வெகுஜனங்களுடன் தம்மை ஐக்கியப்படுத்துதல் வேண்டும். ''வெகுஜனங்களிடமிருந்து, வெகுஜனங்களுக்கு'' என்ற தத்துவத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். கட்சி ஊழியர்கள் வெகுஜனங்களின் மத்தியில் சென்று ஆராய்வுகள், பரிசீலனைகள் நடத்தி வெளிப்படையான சிறந்த உதாரணங்களை கிரகித்து அவற்றில் மூன்றிலொரு பகுதியை முதலில் கிரகித்துவிட்டு, பின்னர் முழு வேலையையும் சிறந்த முறையில் செய்வது மிகமிக அத்தியாவசியமாகும். வெகுஜனங்கள் வெளிப்படுத்தும் பல விஷயங்களை நாம் இன்னமும் சரியாக புரிந்துகொள்ளாமல் இருக்கின்றோம். அவர்களிடமிருந்து நாம் கற்று, முதிர்ந்த அவர்களது அனுபவங்களை பிரபல்யப்படுத்துதல் வேண்டும்.

## ஐந்தாவது தகுதி

விமர்சனம், சுயவிமர்சனம் செய்வதில் நாம் தைரியசாலிகளாக இருத்தல் வேண்டும். இது ஐந்தாவது தகுதியாகும். நமது கட்சியின் சிறந்ததோர் பாரம்பரியம் இது. விமர்சனம், சுயவிமர்சனம் ஆகியவற்றின் மூலமே கம்யூனிஸ்டுகள் தம்மை புடம் போட்டுக்கொள்ள முடியும்; தம்மை விருத்தி செய்துகொள்ள முடியும். ''நீ மட்டும்தான் உண்மைகள் சகலவற்றையும் கொண்டுள்ளதாகக் கருதிக்கொண்டு, நீ எப்பொழுதும் சரியாக இருப்பதாக சிந்திக்க வேண்டாம். நீ இல்லாவிட்டால் பூமி சுற்றாமல் நின்றுவிடும் என்பதுபோல நீ மட்டும்தான் சகலதையும் செய்வாய், மற்றவர்கள் ஒன்றுமே செய்யமுடியாதவர்கள் என எண்ண வேண்டாம்.'' கட்சியைஸ்திரப்படுத்தும் இயக்கத்தின்போது அதற்குப் பிறகும் கம்யூனிஸ்டுகள் தமது இதயங்களை வெகுஜனங்களுக்காகத் திறந்து அவர்களது கருத்துக்களை வரவேற்றல் வேண்டும். ஒருவர் தவறை இழைத்துவிட்டால் அவர் தன்னை சுயவிமர்சனம் செய்து, மற்றவர்களின் விமர்சனத்தை வரவேற்று தனது தவறுகளைத் திருத்திக்கொள்வாரேயானால் அவர் சிறந்த தோழராவார்.

## சுருக்கம்

கட்சி அங்கத்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து தகுதிகளையும் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனைக்கும், தலைவர் மாஓவின் பாட்டாளி வர்க்க புரட்சிகர மார்க்கத்திற்கும் விசுவாசமாக இருத்தல் ஒன்று; வெகுஜனங்கள் மீது நம்பிக்கை வைத்து அவர்களில் தங்கி இருத்தல் மற்றொன்று; ஒருவரைப் பற்றி சரியான கண்ணோட்டம் வைத்திருத்தல் பிறிதொன்று. ஒருவர், தனது உலக கண்ணோட்டத்தை உணர்வுபூர்வமாகத் திருத்தி அமைப்பதற்கும், கட்சியில் சித்தாந்த ரீதியாக முழுமையாகச் சேர்வதற்கு முயலுவதற்கும் இந்த மூன்று பிரச்சினைகளையும் தீர்ப்பதில் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. பாட்டாளி வர்க்க உலக கண்ணோட்டத்தை ஏற்படுத்துதல், கட்சி அங்கத்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து தகுதிகளுக்கு இணங்க தம்மை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலமே ஒருவர் பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினராக மாற முடியும். இத்தகைய முன்னேறிய பகுதியினர் எவ்வளவு கூடுதலாக இருக்கின்றனரோ அவ்வளவு தூரம் நமது கட்சி ஸ்தாபனங்கள் போராட்டப் பாசறைகளாக விளங்க முடியும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் நமது மகத்தான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணியை நாம் வெற்றியுடன் நிறைவேற்ற முடியும்.

## மேலும் சக்தியடைவது திண்ணம்

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின்போது, கட்சியின் 9வது மாநாட்டின் ஒளிமயமான வழிகாட்டலின்கீழ் நமது கட்சியில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனையின் அடிப்படையில் தோழர் மாஓவை தலைவராகவும், தோழர் லின்பியௌவை உபதலைவராகவும் கொண்ட கட்சியின் மத்திய கமிட்டியைச் சுற்றி என்றுமில்லாதவாறு ஐக்கியம் ஏற்பட்டுள்ளது. நமது கட்சி வீரநடைபோட்டு முன்னேறுகிறது. கட்சியை கட்டி வளர்த்தல், அதனை ஸ்திரப்படுத்துதல் ஆகியவற்றிற்கான இயக்கத்தில் அது புடம் போடப்பட்ட பின்னர் நமது கட்சி மேலும் சக்தியுடன், மேலும் உறுதியுடன், மேலும் வேகத்துடன் மிளிர்தல் திண்ணம்.

கட்சி அங்கத்தவர்களுக்கான ஐந்து தகுதிகளையும் உணர்வுபூர்வமாகக் கற்று அவைகளை நிறைவேற்றி, கட்சியின் புதிய சட்டதிட்டத்தையும், கட்சியைக் கட்டி வளர்த்தல் பற்றிய தலைவர் மாஓவின் தத்துவத்தையும் உணர்வு பூர்வமாகக் கற்று அவற்றை நிறைவேற்றி; கட்சியைக் கட்டி வளர்த்து அதனை ஸ்திரப்படுத்துவதிலும், சோஷலிஸப் புரட்சியிலும், சோஷலிஸ நிர்மாணத்திலும் மகத்தான சாதனைகளை ஈட்டி நமது கட்சியின் 50வது ஆண்டு நிறைவு விழாவை மகிழ்வுடன் வரவேற்போமாக.

மகத்தான புகழ்பூத்த சரியான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நீடூழி வாழ்க!

மகத்தான மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனை நீடூழி வாழ்க!

மகத்தான தலைவர் தோழர் மாசேதுங் நீடூழி நீடூழி வாழ்க!

**மகத்தான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 49வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி "மக்கள் தினசரி", "செங்கொடி", "விடுதலைச் சேனையின் தினசரி" ஆகிய சீன பத்திரிகைகளில் கூட்டாக எழுதிய ஆசிரிய தலையங்கம் இங்கு பிரசுரிக்கப் பட்டுள்ளது. -ஆர்**

---

### ... - சுய அம்பலம்

# சோவியத் திரிபுவாதிகள் ஆசியாவில் புரட்சியை எதிர்க்கிறார்கள்

...நாமும், வட வியட் நாமும் ஆகும். ஆகையால் ''தொல்லைகளின் அபாயம் அதிகமாகவே இருக்கிறது'' அதே நேரத்தில் ''மக்கள் சீனம் நிலைகொண்டுள்ள தன்மையும்... இங்குள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கு சீனம் ஆதரவளிக்கும் சாத்தியக் கூறுகள் அதிகமாகவே இருக்கின்றன.'' இதனால், ஆசியவில் போர் ஒன்று ஏற்படுமேயானால், ''கைத் தொழில் ரீதியிற் அபிவிருத்தியடைந்துள்ள ஜப்பானும், சோவியத் யூனியனும் மிகவும் பாதிக்கப்பட வேண்டி நேரிடும்; ஆகவே, இந்த இரு நாடுகளும் ஒருமித்து நடவடிக்கை எடுப்பதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது'' என சோவியத் திரிபுவாதிகள் கருதுகிறார்களாம். ஜப்பானிய ஏகபோக முதலாளித்துவத்துடன் அரசியல், பொருளாதார ரீதியில் கூட்டுச் சேரும் சோவியத் திரிபுவாதிகள் தம் கூட்டைப் பலப்படுத்துவதற்காக சோவியத் நாட்டின் தேசிய நலன்களை எவ்வகையிலும் விற்கின்றனர் என்பதை டீமிற்றி பெற்றோவின் பேச்சில் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஜப்பானிய பத்திரிகையான ''மைனிசி ஷிம்புன்'' தனது மே, 14ந் திகதி வெளியீட்டில் இப் பேச்சைப் பிரசுரித்து அதன் ''அதி முக்கியத்துவத்தை''யும் எடுத்துக் காட்டியது. அப் பேச்சின் சில பகுதிகளை கீழே படிக்கலாம்.

''ஜப்பானுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையிலுள்ள பொருளாதார உறவு சம்பந்தமாக பொருளாதார பரிவர்த்தனை விருத்தியில் ஐந்து குறிப்பிடத்தக்க விஷயங்கள் முதலில் சுட்டிக் காட்டப்பட வேண்டும்,

முதலாவது: ஜப்பானதும், சோவியத் யூனியனதும் பொருளாதார அமைப்பு. ஜப்பான் இயற்கை வளம் குன்றியதாகவும், சோவியத் யூனியன் மிகுந்த இயற்கை வளம் உள்ளதாகவும் இருக்கிறது. இது, ஜப்பானின் கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களை சோவியத் யூனியன் கொடுத்துதவும் திறன் பெற்றிருக்கிறது என்பதைக் குறிக்கிறது. குறையை நிவர்த்தி செய்வதற்கும் ஒன்றுக்கொன்று உதவுவதற்கெனவும் இரு நாடுகளும் தம் பொருளாதார உறவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இரண்டாவது: புவியியல் நிலைகள். இரண்டு நாடுகளும் புவியியல் நிலையில் நெருங்கிய அயலாராக இருப்பதால் பரஸ்பர பரிவர்த்தனைக்கு உதவியாக இருக்கிறது.

மூன்றாவது: இரு நாடுகளின் தொழில் நுட்பப் புரட்சியும், அபிவிருத்தியும். இரு நாடுகளும் புதிய தொழில் நுட்பத்தைக் கண்டு பிடித்து, புதிய தொழிற்சாலைகள் அமைத்து புதிய முறையில் உற்பத்தியை அதிகரித்திருக்கின்றன. இதனால் வர்த்தகத் துறையில் இறக்குமதிப் பட்டியலில் இதுவரை இல்லாத பலவற்றைச் சேர்த்திருக்கின்றன. வர்த்தகம் இதனால் விருத்தியடைகின்றது.

நான்காவது: சோவியத் பொருளாதாரத்தின் வளர்ச்சி. மூப்பது வருடங்களுக்கு முன்னர் சோவியத் நிபுணர்களிடையே ஓர் தவறான அபிப்பிராயம் நிலவிவந்தது. அவை தன்னிறைவு பெரும் அவா, வெளிநாட்டு வர்த்தகத்தில் சுயேச்சை மனப்பான்மை; சொந்த முயற்சியில் உறுதி வைத்து நாட்டை அபிவிருத்தி செய்யும் நம்பிக்கை. ஆனால், சோவியத் வெளிநாட்டு வர்த்தகம் கடந்த பதினைந்து வருடங்களுக்கிடையில் பெருமளவு கூடியிருக்கிறது. அதனுடைய முழு அளவும் ஜப்பானிலும் பார்க்க சிறிதளவே குறைவாக இருக்கிறது. இதற்கு நிபுணர்களின் மனமாற்றமே காரணம். இதன் பிரகாரம் சோவியத் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான முறையில் பரந்துபட்ட ரீதியில் பிறநாடுகளுடன் வர்த்தகம் செய்யப்படுகிறது.

சோவியத் முதலீடுகளில் அரைப்பகுதியோ அல்லது மூன்றில் இரண்டு பகுதியோ சோவியத் தூரகிழக்கிற்கும், சைபீரியாவிற்கும் போகின்றன. அங்கு புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு இயந்திரங்களும், உபகரணங்களும் தேவைப்படுகின்றன. உள்நாட்டில் ஐரோப்பாவிற்கு அருகிலுள்ள பகுதிகளிலிருந்து இப் பொருட்களைக் கொண்டு செல்வதற்குப் போக்குவரத்து செலவுகள் அதிகமாகும். மேலும், சோவியத் தூரகிழக்கிலும், சைபீரியாவிலும் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும்போது கூடவே ஜனத்தொகையும் அதற்குத் தேவையான துணிகளும் மற்றும் தினசரி பாவனைகளின் தேவைகளும் அதிகரிக்கும். தேவையை உள்நாட்டு உற்பத்தியால் மட்டும் சமாளிக்க முடியாது. ஆகவே, இப்பகுதிகளுக்கு அருகிலிருக்கும் ஜப்பானியிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

ஐந்தாவது: அரசியல் காரணங்கள். தூரகிழக்கிலேயே ஜப்பானும், சோவியத் யூனியனும் தான் உற்பத்திச் சக்தியில் உயர்ந்தவை. அமைதியின்மையைக் குறைப்பது; பாதுகாப்பையும், சமாதானத்தையும் நிலைநாட்டுவது போன்ற விஷயங்களில் இரு நாடுகளின் முக்கிய நலன்களும் ஒரே மாதிரியானவை. ஆசியாதான் உலகில் மிகவும் அபாயம் சூழ்ந்த பிரதேசமாகும்.

அதன் காரணங்கள்:

ஒன்று: கடந்த பத்திலிருந்து இருபது வருடங்களுக்

6-ம் பக்கம் பார்க்க

# அரசு என்பது என்ன?

**அரசு பற்றி எமது வாசகர்கள் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும், அதுவும் இன்றைய கட்டத்தில் இது மிக மிக அவசியம் என்று கருதி, அரசு பற்றி மாமேதை லெனின் கூறிய விளக்கத்தை இங்கு தருகிறோம். -ஆர்**

(சென்ற வாரத் தொடர்)

ருஷ்யாவிலோ அல்லது அதைவிட மிகவும் நாகரிகம் படைத்த நாடுகளில் ஏதாவது ஒன்றிலோ உள்ள எந்த கட்சியை நாம் எடுத்துக் கொண்டாலும், கிட்டத்தட்ட எல்லா அரசியல் தகராறுகளும், வேறுபாடுகளும், அபிப்பிராயங்களும் இன்று அரசைப் பற்றிய சித்தாந்தத்தைச் சுற்றியே மையமிடுவதைக் காண்கிறோம். ஒரு முதலாளித்துவ நாட்டில், ஒரு ஜனநாயக குடியரசில்—குறிப்பாக, சுவிட்ஸர்லாந்து அல்லது அமெரிக்கா போன்ற ஒரு நாட்டில்-மிக மிகச் சுதந்திரமான ஜனநாயக குடியரசுகளில், அரசு என்பது, பொதுஜன விருப்பத்தின் வெளியீடாக, மக்களுடைய பொதுவான தீர்மானத்தின் திரண்ட முடிவாக, தேசிய விருப்பத்தின் வெளியீடாக, இன்னும் இவை போன்றவையாக இருக்கின்றதா? அல்லது, அரசு என்பது அங்குள்ள தொழிலாளி, விவசாயி வர்க்கங்களின்மீது முதலாளிகள் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த சக்தியளிக்கும் ஒரு இயந்திரமாக இருக்கின்றதா? இது ஒரு அடிப்படையான பிரச்சினை! இதைச் சுற்றித்தான் உலகம் எங்கும் அரசியல் தகராறுகள் மையமிடுகின்றன. போல்ஷெவிஸம் பற்றி என்ன சொல்லப்படுகிறது? பூர்ஷுவா பத்திரிகைகள் போல்ஷெவிக்குகளைத் (கம்யூனிஸ்டுகளை மொ-ர்) திட்டுகின்றன. போல்ஷெவிக்குகள் மக்கள் ஆட்சிக்கு உலை வைக்கிறார்கள் என்ற உளுத்துப்போன குற்றச்சாட்டை திருப்பித் திருப்பிச் சொல்லாத எந்த ஒரு செய்தித்தாளையும் கூட நீங்கள் காண முடியாது. விடுதலையையும், மக்களின் ஆட்சியையும் போல்ஷெவிக்குகள் ஊறுபடுத்திவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைத் தாங்கள் தாம் கண்டறிந்ததாக, தங்களுடைய புத்திசாதுரியத்தால் அறிந்ததாக நமது மென்ஷெவிக்குகளும், சோஷலிஸ்ட்—புரட்சிவாதிகளும் தங்கள் அப்பாவித் தனத்தினால் நினைப்பார்களானால் (ஒருகால் அது அப்பாவித்தனமாக இல்லாமலுமிருக்கலாம்; ஆனால் பழமொழியில் சொல்வதுபோல அப்பாவித்தனம் வழிப்பறியைவிட மிகக் கேடானது) அவர்கள் எள்ளி நகையாடுமளவுக்கு தவறான கருத்துடையவராவர். இன்று மிகச் செல்வம் படைத்த நாடுகளில் உள்ள மிக மிக செல்வச் செழிப்பான பத்திரிகைகள், கோடிக்கணக்கான பிரதிகளை வழங்கி, பூர்ஷுவா வர்க்கத்தின் பொய்களையும் ஏகாதிபத்தியக் கொள்கையையும் பரப்புவதற்காக கோடிக்கணக்கில் பணத்தைச் செலவிடுகின்றன. போல்ஷெவிஸத்துக்கு எதிராக இவ்வடிப்படை வாதங்களையும் குற்றச்சாட்டுக்களையும் திருப்பித் திருப்பிச் சொல்லாதவை இந்த பத்திரிகைகளில் ஒன்று கூட இல்லை. அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்ஸர்லாந்து ஆகியவை ஜனநாயக ஆட்சியை ஆதாரமாகக் கொண்ட, முன்னேற்றமான அரசுகள் என்றும், போல்ஷெவிக் குடியரசோ கொள்ளைக்காரர்களின் அரசு என்றும், அதில் சுதந்திர உணர்வு என்பது அறியப்படாத ஒன்று என்றும், போல்ஷெவிக்குகள் ஜனநாயக ஆட்சி என்ற கருத்துக்கே உலை வைத்து, அரசியல் நிர்ணய சபையும் கூடக் கலைத்து விடும் அளவுக்குப் போய்விட்டார்கள் என்றும் அவை கூறுகின்றன.

போல்ஷெவிக்குகளுக்கு எதிராகச் செய்யும் இந்தக் கொடிய குற்றச்சாட்டுகள் உலகம் எங்கும் திருப்பித் திருப்பிக் கூறப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகள் ஒரு கேள்விக்கு எதிரே நம்மை முழுக்கவும் கொண்டு வந்து நிறுத்துகின்றன. அரசு என்பது என்ன? இக்குற்றச் சாட்டுகளைப் புரிந்து, பரிசீலித்து, அவற்றின்பால் அறிவுபூர்வமான ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமானால், காதால் கேட்டதைக் கொண்டல்லாமல் நமக்கே உரிய உறுதியான கருத்தைக் கொண்டு, அதை ஆராய வேண்டுமானால், அரசு என்பது என்ன? என்பதுபற்றி நாம் தெளிவான கருத்தைப் பெற வேண்டும்.

விதம் விதமான முதலாளித்துவ அரசுகள் இப்போது உள்ளன. இவற்றிற்கு ஆதரவாக வாதிடும் பொருட்டு யுத்தத்திற்கு முன்பு உருவாக்கப்பட்ட எல்லாச் சித்தாந்தங்களும் நம்முன் இருக்கின்றன. எனவே, இந்தக் கேள்விக்கு தக்கவிதமாக விடையிறுக்க வேண்டி, இச் சித்தாந்தங்களையும், கருத்துக்களையும் நாம் விமர்சனக் கண்ணோடு ஆராய வேண்டும்.

ஏங்கெல்ஸ் எழுதிய ''குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியியவற்றின் தோற்றம்'' என்ற நூலைப் படிப்பது உங்களுக்கு உதவியாய் இருக்கும் என்று நான் முன்னமேயே அறிவுறுத்தியுள்ளேன். நிலத்திலும், உற்பத்திச் சாதனங்களிலும் தனியுரிமை நிலவும் ஒவ்வோர் அரசும், மூலதன ஆதிக்கம் செலுத்தும் ஒவ்வோர் அரசும் எவ்வளவுதான் ஜனநாயகத்தன்மை உடையதாக இருப்பினும் அது முதலாளித்துவ அரசேயாகும். தொழிலாளி வர்க்கத்தையும் ஏழை விவசாயிகளையும் அடிபணிய வைப்பதற்காக முதலாளிகளால் பயன்படுத்தப்படும் இயந்திரமாகும் அது என்று அந்த நூல் கூறுகிறது. சர்வஜன வாக்குரிமை, அரசியல் நிர்ணய சபை, பாராளுமன்றம் என்பன எல்லாம் வெறுமனே ஒரு வெளித் தோற்றந்தான்; ஒருவிதமான கடன் பத்திரமே ஆகும்; பொருளின் சாரத்தை இது மாற்றுவதில்லை என்றும் அது கூறுகிறது.

அரசு செலுத்தும் ஆதிக்கத்தின் வடிவங்கள் வேறுபடக் கூடும். ஒருவகை வடிவம் நிலவுகிற இடத்தில், மூலதனம் தன் அதிகாரத்தை ஒரு விதமாகவும், இன்னொருவகை வடிவம் நிலவுமிடத்தில் வேறொருவிதமாகவும் வெளிப்படுத்தும். ஆனால், வாக்களிக்கும் தகுதிகள் உண்டோ இல்லையோ அல்லது குடியரசு ஜனநாயகத் தன்மை உடையதோ இல்லையோ, எதுவானாலும் சாராம்சத்தில் மூலதனத்தின் கரங்களில்தான் அதிகாரம் இருக்கிறது. உண்மையில், குடியரசு எவ்வளவுக்கு ஜனநாயகத் தன்மை கொண்டதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு முதலாளித்துவ ஆட்சி அதிக முரடாகவும் அதிக இரக்கமின்றியும் இருக்கிறது. உலகத்தில் மிகப் பெரிய அளவு ஜனநாயகத் தன்மையுடைய குடியரசுகளில் ஒன்று, ஐக்கிய அமெரிக்க ராஜ்யம். இருந்தும் அமெரிக்காவில் இருப்பது போல (1905க்குப் பிறகு, அங்கிருந்தவர்களுக்கு ஒருவேளை இது தெரியக்கூடும்) அவ்வளவு பண்பற்ற வகையில்—அவ்வளவு பட்டவர்த்தனமாக ஊழல் மிகுந்த வகையில் சமுதாயம் முழுவதன் மீதும் மூலதனத்தின் அதிகாரமும், விரல்விட்டெண்ணக்கூடிய ஒரு சில கோடீஸ்வரர்களின் ஆதிக்கமும் இருப்பது வேறு எங்கும் கிடையாது. மூலதனத்திற்கு இருப்பிடம் கிடைத்தால் போதும். சமுதாயம் முழுக்கவும் அது ஆதிக்கம் புரியும். எந்த ஜனநாயக குடியரசும் எவ்விதமான வாக்குரிமையும் அப் பொருளின் சாரத்தை மாற்ற முடியாது.

—தொடரும்

# உலக வலம்

உஸ்மான்

## மொசாம்பிக்

மொசாம்பிக் தேசபக்த ஆயுதப்படைகள் காபோ டெல்கடோ, நியஸ்ஸா மாகாணங்களில் கடந்த சில மாதங்களாக நடத்திய இராணுவத் தாக்குதல்களில் 175 போர்த்துக்கீசக் காலனித்துருப்புகளும் - பொம்மைத் துருப்புகளும் அழித்தொழிக்கப்பட்டதாக, தார்எஸ்சலாமில் மொசாம்பிக் விடுதலை முன்னணி வெளியிட்ட இராணுவ அறிக்கையொன்று கூறுகிறது.

மே 6ந் திகதியிலிருந்து ஜூன் 13 வரையான காலத்தில் மொசாம்பிக் தேசபக்த ஆயுதப்படைகள் காபோடெல்காடோ மாகாணத்தின் வட கிழக்குப் பகுதியில் 18 மறைந்திருந்து தாக்கும் நடவடிக்கைகளிலும், 5 சுரங்கத்தாக்குதல்களிலும் 170 எதிரித் துருப்புக்களை அழித்தொழித்ததுடன், 17 இராணுவ வாகனங்களை சேதப்படுத்தியும் ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்தியுமுள்ளனர் என்று மேலும் அவ்வறிக்கை கூறியது.

## தாய்லாந்து

தாய்லாந்து கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவலை ஏற்று வீரஞ்செறிந்த தாய்லாந்து தேசபக்த ஆயுதப்படைகளும் மக்களும் வீரதீரத்துடன் போராடி அமெரிக்க - தாய்லாந்து பிற்போக்குவாதிகளுக்கு பல இடங்களில் இவ்வருடம் முதல் ஆறுமாதத்தில் பெருந்தொகையான சேதத்தை உண்டு பண்ணியதாக 'தாய்லாந்து மக்கள் குரல்' வானொலி ஜூலை 17ம் திகதி கூறியது.

வட தாய்லாந்தில் தேசபக்த ஆயுதப்படைகளும், மக்களும் சுமார் 150 நடவடிக்கைகளில் ஈடுபட்டு, தனம் - பிரபாஸ் கும்பலின் 400 இராணுவ - பொலிஸ் படையினரை அழித்தொழித்ததுடன் 20 விமானங்களையும், 15 இராணுவ வாகனங்களையும், பல எதிரி நிலையங்களையும் சேதப்படுத்தினர்; அத்துடன் பெருந்தொகையான இராணுவ தளவாடங்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றினர் என்று வானொலி கூறியது.

வானொலி தொடர்ந்து கூறுகையில், இந்த வருடத்தின் முதல் ஆறுமாதங்களில் வட தாய்லாந்தின் நான் பெற்ஷாபூன், பிற்சனுலொக், ராக் ஆகிய மாகாணங்களில் அமெரிக்க - தனம் கும்பலின் ''சுற்றிவளைத்து - அடக்குமுறை''யை மக்கள் விடுதலைச்சேனை திருப்பி அடித்துத் தகர்த்தெறிந்தது. ஹம்பலங் பெற்ச் மாகாணத்தில்விரோதிக்கெதிரான தாக்குதல்கள் தொடங்கியுள்ளதுடன், புதிய கொரில்லா நடவடிக்கைப் பகுதிகளும், தளப் பிரதேசங்களும் உருவாகியுள்ளன. வடகிழக்குத் தாய்லாந்தின் நாகோர்ன் பானொம் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விடுதலைச்சேனை நடத்திய 30 வீரஞ்செறிந்த தாக்குதல்களில் பெருந்தொகையான எதிரித்துருப்புக்கள் அழித்தொழிக்கப்பட்டன. இது வெகுஜனங்கள் மத்தியில் பரந்தளவில் பிரச்சாரஞ் செய்து அவர்களைத் திரட்டி, நிலப்பிரபுக்கள், பிற்போக்கு அதிகாரிகள், எதிரி ஏஜெண்டுகள் ஆகியோரின் கொடுமை நிறைந்த குற்றங்களுக்காக அவர்களுக்கு மரணதண்டனை விதிக்க வழிவகுத்தது.

இப் பிரமாண்டமான வெற்றிகள் மக்களுக்கு மகிழ்ச்சியையும், அமெரிக்க - தனம் கும்பலுக்கு பெரும் கலக்கத்தையும், இழப்புக்களையும் அளித்துள்ளதோடு, பல இளம் வாலிபர்களை அமெரிக்க - தனம் கும்பலுக்கு எதிராக மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ய வைத்துள்ளது. சாவாங் பிராந்தியத்தின் நக்கோர்ன் சிறித்தம்மார் ஆர்ட் மாகாணத்தில், 'தனம் கும்பலின் பொம்மை ''பாதுகாப்பு வொலண்டியர்ஸ் பிரிவிலிருந்து'' 40 இளைஞர்கள் விலகி மக்கள் அணியுடன் சேர்ந்து அமெரிக்க—தனம் கும்பலுக்கெதிராகப் போராடுகின்றனர்.

# சோவியத் திரிபுவாதிகள்......

— 5-ம் பக்கத் தொடர்

கிடையில் இந்தப் பிராந்தியத்தில்தான் அடிக்கடி போர்கள் உண்டாயின.

இரண்டு: உலகில் உள்ள பிரிக்கப்பட்ட தேசங்கள் நாலில் மூன்று ஆசியாவில் தான் உள்ளன. அவை சீனாவும், தைவானும்; தென் கொரியாவும், வடகொரியாவும்; தென்வியட்நாமும், வடவியட்நாமும். ஆகவே, தொல்லைகளின் அபாயம் அதிகமாகவே இங்கு - இருக்கிறது.

மூன்று: ஐரோப்பாவில் போர் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் குறைந்து விட்டன. ஆனால், ஆசியாவில் பல தேசங்கள் போர் சம்பந்தமாக பராமுகமாகவும், கவலையற்றும் இருக்கின்றன.

நான்கு: சீனாவின் நிலை. சீனா இன்றைய அரசியலிலும், கொள்கைகளிலும் கடைப்பிடிக்கும் ஆபத்தான போக்கைப் பார்த்தால் இது போன்ற இராணுவ நடவடிக்கைகளுக்கு அது ஆதரவு அளித்தே தீரும்.

ஆசியாவில் இந்த அபாயகரமான பகுதிகளிலொன்றில் போர் மூண்டால் கைத்தொழில்ரீதியாக அபிவிருத்தியடைந்துள்ள ஜப்பானும், சோவியத் யூனியனுமே மிகவும் பாதிக்கப்படவேண்டி நேரிடும். எனவே, ஆசியாவில் உள்ள அமைதியின்மையைக் குறைப்பதற்காக ஜப்பானும், சோவியத் யூனியனும் ஒருமித்த செயலில் ஈடுபடுவதற்காக ஒன்றோடொன்று கூட்டுறவு கொள்வதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது.''

—பீகிங் றிவ்யூ

குறிப்பு:

சோவியத் திரிபுவாதிட்மிற்றி பெற்றோவின் பேச்சு, ஆசியாவில் அமெரிக்க ஆக்கிரமிப்பையும், ஜப்பானிய பாசிஸ இராணுவ பயமுறுத்தல்களையும் எதிர்த்துப் போராடும் மக்களும், நாடுகளும், போராடும் மக்களுக்கு பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் கொடுக்கும் மக்கள் சீனமும் தான் ''பொது எதிரி''யாகக் குறிப்பிடுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியான ஜப்பானிய இராணுவ பாசிஸ்டுகளை நண்பர்களாகக் கருதுகிறது. சோவியத் திரிபுவாதிகள் சமூக-ஏகாதிபத்தியவாதிகள் என்பதை அவனது பேச்சு நிரூபிக்கிறது. -ஆர்

# தேசிய விடுதலையை வென்றெடுக்கும்வரை ஏந்தியுள்ள ஆயுதத்தை கீழே வைக்கமாட்டோம்

## -- 'அல்பதாஹ்' பிரதிநிதி

தற்போது இலங்கை வந்துள்ள பாலஸ்தீன் தேசிய விடுதலை முன்னணி ''அல்பதாஹ்'' பிரதிநிதிகளுக்கு இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் வரவேற்பு அளித்தது. கடந்த 30ந் திகதி இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடந்த இந்த வரவேற்புக்கு தோழர் வொட்சன் பெர்ணாந்து தலைமை வகித்தார்.

அல்பதாஹ் பிரதிநிதிகள் மூவரையும் தோழர் சண் வரவேற்று உரையாற்றினார். அவர் பேசும்போது, பாலஸ்தீன் மக்களும் மற்றும் அரபு மக்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், அதன் கைக்கூலி இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களையும் எதிர்த்து நடத்தும் வீரஞ் செறிந்த விடுதலைப் போராட்டத்தின் புரட்சிகர செய்தியை அல்பதாஹ் பிரதிநிதிகள் மூலம் மேலும் அறிந்து கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். என்றார்.

ஐ. நா.வின் ''சமாதானத் திட்டத்தையும்'' காட்டிக் கொடுப்பவர்களின் ''சாமாணத் தீர்வு'' சதிகளையும் முறியடித்து உறுதியுடன் ஆயுதம் தாங்கிப் போராடும் அல்பதாஹ் பிரதிநிதிகளுக்கு வரவேற்பளிப்பதில் நாம் பெருமையடைகிறோம். பாலஸ்தீன் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு இலங்கையின் புரட்சிகர மக்கள் தம்மாலியன்ற சகல உதவிகளையும் அளிப்பார்கள். தற்போதைய அரசாங்கம் தற்காலிகமாக இஸ்ரேலுடன் ராஜீயத் தொடர்புகளை துண்டிப்பது மட்டும் போதாது, நிரந்தரமாகவே துண்டிக்க வேண்டும். இதற்காக இலங்கை மக்கள் தொடர்ந்து போராடுவார்கள் என்றார்.

அவர் மேலும் பேசுகையில், ''ஒரு சிறிய நாடொன்றின் மக்கள் போராடத் துணிந்து ஆயுதம் ஏந்தி தமது நாட்டின் தலைவிதியை தமது கைகளில் ஏற்றால், பெரிய நாடொன்றின் ஆக்கிரமிப்பை அவர்கள் நிச்சயம் தோற்கடிப்பார்கள்'' என்ற தோழர் மாஓவின் தீர்க்கதரிசனத்தை பாலஸ்தீன் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் நமக்கு உறுதிப்படுத்துகிறது. அரபு மண்ணிலிருந்து சகல ஏகாதிபத்தியவாதிகளையும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களையும், பிற்போக்கு சக்திகளையும் ஒழித்துக் கட்டும்வரை பாலஸ்தீன் மக்கள் தமது கைகளில் ஏந்தியுள்ள துப்பாக்கிகளை கீழே வைக்கமாட்டார்கள் என நாம் திடமாக நம்புகிறோம் என்றார்.

மண்டபத்தில் நிறைந்திருந்தவர்களின் பலத்த கைத்தட்டல், ஆரவாரத்திற்கிடையே அல்பதாஹ் பிரதிநிதிகளின் தலைவர் தோழர் அபு ஹசன் தனது உரையைத் தொடங்கினார்.

அவர் பேசும்போது, இந்த மாலை நேரத்தில் உங்களையெல்லாம் சந்தித்து உரையாடுவதற்கும், அல்பதாஹ் தலைவர் தோழர் யஸீர் அரபாத் அவர்களின் புரட்சிச் செய்தியை புரட்சிகர இலங்கை மக்களுக்குக் கூற வாய்ப்பளித்த இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்துக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

விடுதலைக்காகப் போராடும் மக்கள் தம்மில் நம்பிக்கை வைத்து ஐக்கியத்துடன் கைகளில் ஆயுதம் ஏந்திப் போராடினால் அவர்களைத் தோற்கடிக்க உலகில் எந்த சக்தியும் கிடையாது என்பதை நன்குணர்ந்தே பாலஸ்தீன் மக்கள் அல்பதாஹ் தலைமையின் கீழ் இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்துகிறார்கள்.

1917ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மோசடிக்கு முகம் கொடுத்த பாலஸ்தீன் மக்கள் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். 1917, 1920, 1929, 1948 ஆகிய ஆண்டுகளில் போராட்டங்கள் நடந்தன. எனினும் ஏகாதிபத்தியவாதிகள் சகல சதிகளையும் செய்து பாலஸ்தீன் மக்களை தமது மண்ணிலிருந்து, நாட்டிலிருந்து வெளியேற்றினார்கள்; நாடற்ற அனாதைகளாக்கி சொல்லொணா துன்பங்களுக்கும், கொடுமைகளுக்கும் உள்ளாக்கினார்கள்.

1948 முதல் 1965 வரை பாலஸ்தீனப் பிரச்சினை சமாதானமாகத் தீர்க்கப்படும் என நம்பினோம்; எமது இழந்த பூமியை மீட்டுத்தாருங்கள் என ஐ. நா. சபையின் கதவுகளைத் தட்டிக் கேட்டோம்; இன்னும் பல சர்வதேச சபைகளின் படிகளில் ஏறி இறங்கினோம். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது. எனவே, 1965, ஜனவரி முதலாந் திகதி முதல் துப்பாக்கி வேட்டின் ஒலியினூடே பாலஸ்தீன் தேசிய விடுதலைப் போராட்டம், ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டமாக வெடித்தது. ''துப்பாக்கியிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்ற தீர்க்கதரிசனம் பாலஸ்தீன் மக்களுக்கு நடைமுறைப் பாடமாக அமைந்துவிட்டது என்றார்.

அவர் தொடர்ந்து பேசும்போது, எங்களது போராட்டம் சில சிறிய பழைய துப்பாக்கிகளுடன் தான் ஆரம்பமாகியது. பல சோதனைகள், பல துன்பங்கள், நெருக்கடிகள், அளப்பரிய தியாகங்கள் மத்தியில் வளர்ந்து இன்று மக்கள் யுத்தம் நடத்தும் பாலஸ்தீன் தேசிய விடுதலை முன்னணியாகத் திகழ்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமது ஆதிக்கத்திலுள்ள ஐ. நா. சபை மூலம் ''மத்திய கிழக்கில் சமாதானத்துக்குப் பங்கம்,'' ''சமாதானத் தீர்வு'' என்று கூறி ஏமாற்றப் பார்க்கிறார்கள். ஆனால், மத்திய கிழக்கில் சமாதானம் நிலவ வேண்டுமானால், அமெரிக்க ஏகாதிபத்தியமும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களும் அராபிய மண்ணிலிருந்து ஒழிக்கப்பட்ட பின்பே ஏற்பட முடியும். பாலஸ்தீன் மக்கள் 1965ல் தமது கரங்களில் ஆயுதம் ஏந்தியவுடன் ''சமாதானத் தீர்வு'' பற்றி கூப்பாடு போடுகிறார்கள்.

1967ல் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு முன் 1965, ஜனவரி முதலாந் திகதி வெடித்த முதல் துப்பாக்கி வேட்டு பாலஸ்தீனம் பூரண விடுதலை செய்யப்படும் என்பதை உறுதியாக்கியுள்ளது. சகல ஏகாதிபத்தியவாதிகளையும், ஆக்கிரமிப்பாளர்களையும், பிற்போக்கு சக்திகளையும் மத்திய கிழக்கிலிருந்து சம்பூர்ணமாக அழித்தொழிக்கும்வரை பாலஸ்தீன் மக்களாகிய நாம் எமது கைகளில் ஏந்தியுள்ள ஆயுதங்களைக் கீழே வைக்கமாட்டோம்; வெற்றி அல்லது மரணம் என எமது துப்பாக்கிகளின்மீது சத்தியம் செய்துள்ளோம். எமது உயிர்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தியாகம் செய்ய நேரிட்டாலும்கூட எமது ஆயுதங்களை நாம் எமது கரங்களைவிட்டு அகற்ற மாட்டோம். பாலஸ்தீன் தேசிய விடுதலையை வென்றெடுப்போம்; சகல ஏகாதிபத்தியவாதிகளையும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களையும், பிற்போக்கு சக்திகளையும் நிர்மூலமாக்குவோம் என்றார்.

தொடர்ந்து பேசுகையில், எமது தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கும், சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிராக உலக மக்கள் நடத்தும் மகத்தான போராட்டத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாகும். நாம் நடத்தும் போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வீரமிக்க, வியட்நாம் மக்கள் நடத்தும் மாபெரும் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து, தென் கொரியா, மொசாம்பிக் மற்றும் ஆசிய, ஆபிரிக்க நாட்டு மக்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். அவர்களின் தோளோடு தோள் சேர்ந்து இறுதி வெற்றிவரை நாங்கள் போராடுவோம்.

உலக மக்களின் ஆதரவு எமக்குண்டு. தலைவர் மாசேதுங்கின் தலைமையில் அணிதிரண்டுள்ள மகத்தான சீன மக்களின் பேராதரவு நிரந்தரமாக எமக்குக் கிடைத்து வருகிறது. எமது எதிரிகளுக்கு எதிராக, நண்பர்கள் எனப்படுவோர் உதவி அளிக்குமுன் மகத்தான சீனம் எமக்கு உற்சாகமும் உதவியும் அளித்தது. சுதந்திரத்திற்காகவும், தேசிய விடுதலைக்காகவும், போராடும் உலக மக்களின் முழு ஆதரவும் எமக்கு உண்டு. இந்த ஆதரவு பல வழிகளில் கிடைத்து வருகிறது.

இலங்கை மக்கள், பாலஸ்தீன் தேசிய விடுதலைக்கும், பாலஸ்தீன் தேசிய விடுதலை முன்னணி அல்பதாஹ்விற்கும் அளித்து வரும் மகத்தான ஆதரவை நாங்கள் அன்போடு வரவேற்கிறோம். புரட்சிகர இலங்கை மக்கள் எமக்கு அளித்து வரும் பேராதரவு என்றும் நிலைத்திருக்கட்டும் என்றார்.

தோழர் அபு ஹசன் அவர்களின் அராபி மொழிப் பேச்சை பிரதிநிதிகளில் ஒருவரான தோழர் அபு பஷார் அவர்கள் ஆங்கிலத்தில் கூறினார்.

# கினுகலை வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக பதுளை மாவட்டத்தில் வெற்றிகரமான அடையாள வேலைநிறுத்தம்

இரண்டாவது மாதமாக நடைபெறும் கினுகலை தோட்டத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 25,000க்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் சங்க வேறுபாடின்றி ஆகஸ்ட் 3ந் திகதி வெற்றிகரமான ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை நடத்தினார்கள். இந்த அடையாள வேலை நிறுத்தம் செங்கொடி சங்கத்தின் அறைகூவலில் நடைபெற்றது. இலங்கை தோட்ட சேவையாளர் சங்கமும் இதில் கலந்துகொண்டது.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் குறிப்பிட்ட சில சங்கங்கள் அக்கறையின்றி பின்வாங்கியிருந்த போதிலும், இது செங்கொடி சங்கத்துக்கும், தோட்ட சேவையாளர்கள் சங்கத்துக்கும் மகத்தான வெற்றியாக அமைந்தது.

கினுகலை குரூப்பில் இரு மாதங்களாக நடைபெறும் வேலை நிறுத்தத்தில் சகல தொழிலாளர்களும்-சிங்களவர், தமிழர்கள் உட்பட, தலைமைக் குமாஸ்தா முதல் சாதாரண குமாஸ்தாக்கள் வரை கலந்துகொண்டிருக்கிறார்கள். இந்த வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்று வருவதுடன் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகவும் அமைந்துள்ளது. இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான தொழிலாளர்கள் செங்கொடிச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இதில் 200 சிங்களத் தொழிலாளர்களும் உள்ளனர்.

பல மைல்களுக்கு அப்பாலுள்ள குயின்ஸ் டவுன் குரூப்பை கினுகலை குரூப்புடன் இணைப்பதற்கு எதிராகவும், தோட்டத் துரையாக-நிர்வாகியாக செல்லுமிடமெல்லாம் தொழிற் சங்கங்களை உடைக்கும் முயற்சியில் பிரசித்தி பெற்ற, தொழிற் சங்க எதிரியான சமர்வில்லை கினுகலை குரூப்புக்கு நிர்வாகியாக நியமனம் செய்வதற்கு எதிராகவும், இக் குரூப்பைச் சேர்ந்த சக தொழிலாளர்களாலும், சேவையாளர்களாலும் இவ் வேலை நிறுத்தம் நடத்தப்படுகிறது.

இதுவரை தோட்டத்திற்குள் சமர்வில் நுழைவதற்கு தொழிலாளர்களும், சேவையாளர்களும் அனுமதிக்கவில்லை. தோட்ட நுழைவாயில்கள் பூட்டப்பட்டுக்கிடக்கின்றன. இந்த சம்பவம் தோட்டத் தொழிலாளர்களால் எடுக்கப்பட்ட உன்னத புரட்சிகர நடவடிக்கையாக இருப்பதோடு, இலங்கை தொழிற் சங்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகவும் உள்ளது.

தொழிலாளர், சேவையாளர்களின் இந்த புரட்சிகர நடவடிக்கை எதிர்கால நிகழ்ச்சிகளுக்கு கட்டியம் கூறுவதுடன் பதுளை மாவட்டத்தில் சகல தொழிலாளர்களினதும் பரந்துபட்ட ஆதரவையும் பெற்றுள்ளது. இப் பகுதி எம். பி. யும் தொழிலாளர்களுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களும், சேவையாளர்களும் இப் போராட்டதை இறுதி வெற்றிவரை நடத்த தயாராகவுள்ளார்கள். கடந்த 3ந் திகதி நடைபெற்ற ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை தோட்ட நிர்வாகம் கவனத்திற்கு எடுக்காவிட்டால் இதில் சம்பந்தப்பட்ட சகல தொழிற் சங்கங்களும், கினுகலை போராட்டத்துக்கு ஆதரவாக பதுளை மாவட்டத்தில் ஒரு பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

இலங்கை தோட்ட சேவையாளர்கள் சங்கம் தமது பொதுக் கோரிக்கைகளுக்காகவும், கினுகலை வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகவும் ஆகஸ்ட் மாதத்தில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தையும், செப்டம்பர் முதல் திகதியிலிருந்து பொது வேலை நிறுத்தம் செய்யவும் தீர்மானித்துள்ளது.

இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கம், சகல தோட்டத் தொழிலாளர்களையும், தோட்ட சேவையாளர்களையும் கினுகலைப் போராட்டத்துக்கு ஆதரவாக அணிதிரளுங்கள் என அறைகூவல் விட்டுள்ளது.

# மத்திய கிழக்கை காட்டிக் கொடுக்கும் முயற்சிக்கு

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கண்டனம்

அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் கூட்டாகச் சேர்ந்து தயாரித்த அமெரிக்க சமாதானத் திட்டத்தின் மூலம் மத்திய கிழக்கை காட்டிக்கொடுப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை கண்டித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், யூதவாதிகளின் சிருஷ்டியான இஸ்ரேலுக்கு எதிராகவும் வீசுகின்ற பாலஸ்தீன், மற்றும் அரபு மக்களின் விடுதலைப் போராட்டச் சுவாலையை அணைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி என, அந்த அறிக்கை கூறுகிறது.

அறிக்கை மேலும் கூறுவதாவது:

அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் இத் திட்டத்தை நெடுங்காலமாகவே வெகு கவனமாக தயாரித்து வந்துள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியம் இஸ்ரேலுக்கு வெளிப்படையாகவே ஆயுத உதவிகளை அளித்து அதனை தன் கைப்பொம்மை அரசாக வளர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருந்தபோது, சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் இதே கைங்கரியத்தை எகிப்துக்குச் செய்துகொண்டிருந்தது. இஸ்ரேலுக்கு எதிராகப் போராடுவதற்கு அரபு மக்களுக்கு உதவியளிக்கின்றோம் என்ற சாட்டில் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் எகிப்துக்குள் ஆயுதங்களையும் நிபுணர்களையும் குவித்து எகிப்தின் பாதுகாப்புத் திட்டத்தை தன் கைக்குள் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டுள்ளது.

சோவியத் சமூக ஏகாதிபத்தியம் இந்த நிலைமையை உருவாக்கிவிட்டு தேசிய விடுதலை இயக்கங்களைக் காட்டிக் கொடுக்கும் தனது வழமையான வேலையை ஆரம்பித்தது. அரபு மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத் தீயை அணைப்பதற்காக, சோவியத் சமூக ஏகாதிபத்தியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கள்ளக் கூட்டு வேலையைச் செய்துகொண்டு நாஸரை மாஸ்கோவுக்கு அழைத்து அமெரிக்க ஆலோசனைகளை ஏற்குமாறு நிர்ப்பந்தித்தது.

வியட்நாம் மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்திலும் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் இதே வேலையைத்தான் செய்தது என்பதை மறந்துவிடக்கூடாது. வியட்நாம் மக்களுக்கு ஆயுத உதவி அளிப்பதாக உலக முழுவதும் விளம்பரம் செய்துவிட்டு, வியட்நாம் அரசாங்கத்தின்மீது தனக்கு இருந்த செல்வாக்கைப் பாவித்து, சமாதானப் பேச்சுவார்த்தைக்காக பாரிஸ் மாநாட்டுக்குச் செல்லுமாறும், வியட்நாம் மக்களைக் கொன்று குவிக்கும் கொள்ளைகாரர்களுடன் கைகுலுக்குமாறும் வியட்நாம் அரசாங்கத்தை அது நிர்ப்பந்தித்தது.

இவை யாவும் பயனற்றவையாகும். பாரிஸில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் வியட்நாம் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இப்பிரச்சினையை வியட்நாம் போர்க்களத்தில்தான் தீர்க்க முடியும். இதைப்போன்றே பாலஸ்தீனத்தை விடுதலை செய்யும் பிரச்சினையையும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியாது. இதனை ஆயுதப் போராட்டத்தின்மூலமே தீர்க்க முடியும். பாலஸ்தீன தேசிய விடுதலை இயக்கத்தினர் விடுதலைப் போராட்டத்தை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர்.

அமெரிக்கர்கள் முன்வைத்துள்ள சமாதானத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும், தாம் ஏந்தியுள்ள ஆயுதங்களை கீழே வைக்கப் போவதில்லை என்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரும், அல்பதாஹ்வினரும் எடுத்த முடிவை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். புரட்சிப் பாதை எப்போதுமே நேரான பாதையாக இருக்காது. அது வளைவு சுளிவு கொண்டதாகவே இருக்கும். இச் சரியான பாதையில் சென்று, சரியான தந்திரோபாயங்கள் கையாளப்படுமேயானால், இப்பாதை நிச்சயம் வெற்றிக்கு இட்டுச் செல்லும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் தற்காலிக இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனினும் அவர்கள் வெற்றி பெறுவது திண்ணம். ஏனெனில், அவர்களின் முடிவு சரியானது; அவர்களின் லட்சியம் நியாயமானது. உலகம் முழுவதிலுமுள்ள புரட்சிவாதிகளின் ஆதரவும் அவர்களுக்கு இருக்கிறது. எமது சகாப்தத்தின் மாபெரும் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டான தோழர் மாசேதுங் அவர்களினால் தலைமை தாங்கப்படும் மக்கள் சீனத்தின் ஆதரவும் அவர்களுக்கு இருக்கிறது.

இச் சம்பவங்களிலிருந்து சரியான பாடங்களை பாலஸ்தீன மக்களும், ஏனைய அரபு மக்களும், முழு உலக மக்களும் கற்றுக் கொள்ள வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக மக்களின் முதலாம் நம்பர் எதிரி என அவர்கள் கணித்துள்ளதைப் போலவே, சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் தொழிலாளி வர்க்கத்தினதும் உலக முழுவதிலுமுள்ள தேசிய விடுதலை இயக்கங்களினதும் துரோகி என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். பிரதான எதிரியை அடையாளங் கண்டு, அவனைத் தனிமைப்படுத்த அவர்கள் தெரிந்து கொண்டதைப் போல, போலி நண்பர்களையும் அடையாளங் கண்டு, அவர்களால் ஏமாற்றப்படாமல் இருக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சமாதானத் திட்டம் என்ற மாயையின் மூலம் பாலஸ்தீன மக்களினதும், ஏனைய அரபு மக்களினதும் தேசிய விடுதலைச் சுவாலையை அணைப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் எடுக்கின்ற தந்திர முயற்சிகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். சமாதான திட்டத்தை ஏற்பதில்லை, ஏந்திய ஆயுதத்தை கீழே வைப்பதில்லை என அல்பதாஹ் இயக்கத்தினர் எடுத்த முடிவை நாம் ஆதரிக்கின்றோம்.

பாலஸ்தீனத்தை விடுதலை செய்யவும், ஏகாதிபத்தியச் சிருஷ்டியான இஸ்ரேலை இல்லாதொழிப்பதற்கும் பாலஸ்தீனிய மக்களும் ஏனைய அரபு மக்களும் நடத்துகின்ற போராட்டம் வெற்றிபெற நாம் வாழ்த்துகின்றோம்.

### குடியிருப்பாளர் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்
### அதே இடத்தில் இ. சோ. மு. காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது
# வேலியே பயிரை மேய்கிறது

கடந்த 1ந் திகதி மாலை கொழும்பு ஆட்டுப்பட்டித் தெரு (தற்போது ஸ்ரீரத்ன ஜோதி சரணமுத்துமாவத்தை) மேட்டிலிருந்த 342ம் இலக்க சிறு தேனீர் கடையின் தளபாடங்கள் காணிச் சொந்தக்காரரினால் பலாத்காரமாகத் தெருவில் வீசியெறிப்பட்டு கடை காலிசெய்யப்பட்டது. மறுநாள் அதே இடத்தில் இஸ்லாமிய சோஷலிஸ்ட் முன்னணியின் காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது.

இக் கடை இருந்த காணியின் உரிமையாளரான ''ஹாஜி'' யார் இஸ்லாமிய சோஷலிஸ்ட் முன்னணியின் ஆதரவாளர் என்று கூறிக்கொள்ளும் ஒரு வர்த்தகர். இவர் பலாத்காரமாக கடையினுள் புகுந்து அந்த சிறிய கடைக்காரரை வெளியேற்றியுள்ளார்.

வெளியேற்றப்பட்ட அக் கடைக்காரர் அருகிலிருந்த பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு செய்தார். அந்த ''ஹாஜி'' யாரும் பொலிஸ் நிலையம் வந்தார். பலாத்காரமாக குடியிருப்பாளரை வெளியேற்றியவரைப் பாதுகாக்க வீட்டு வாடகை விசாரணைக் கமிட்டி உறுப்பினரும், கெனமன் திரிபுவாத கட்சியின் சார்பில் கொழும்பு நகரசபை உறுப்பினராக இருப்பவருமான பிரபல புரக்டர் சார்ல்ஸ் வேதகண் ஒடோடி பொலிஸ் நிலையம் வந்து அவரைப் பாதுகாத்தார். ஏழை குடியிருப்பாளருக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டியவர், காணிச் சொந்தக்காரருக்கு பாதுகாப்பு அளித்தார்,

முக்கூட்டணி அரசாங்கத்தில் வீடமைப்பு-நிர்மாண அமைச்சர் பீட்டர் கெனமன், ஏழை குடியிருப்பாளருக்கு பாதுகாப்பு அளிப்போம்; பலாத்காரமாக இம்சித்து வெளியேற்றுவதை அனுமதிக்க மாட்டோம்; சட்டத்தின் மூலம் குடியிருப்பாளரைப் பாதுகாப்போம் என தினசரி பத்திரிகைகளில் அறிக்கைமேல் அறிக்கைவிடுவதில் உலக சாதனை புரிகிறார். அதே வேளையில் அவரால் நியமிக்கப்பட்ட வாடகை நிர்ணய கமிட்டியின் உறுப்பினராகவுள்ள அவரது கட்சியின் பிரமுகரே, தாம் அங்கம் வகிக்கும் வாடகை விசாரணைக் கமிட்டி சமர்ப்பித்த 'விசாரணை அறிக்கை'யில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று அவர்கள் கூறும் சட்டத்தையே உதாசினப்படுத்திவிட்டு, காடையர்களைக் கொண்டு பலாத்காரமாக குடியிருப்பாளரை வெளியேற்றிய நபருக்கு பாதுகாப்பு அளித்துள்ளார். இது வேலியே பயிரை மேய்ந்த கதையாற்று. வெளியேற்றப்பட்ட குடியிருப்பாளர் சட்டப்பாதுகாப்பின்றி தெருவில் நிற்க வேண்டியுள்ளது.

இத்தகையவர்கள் வாடகை வீட்டு விசாரணைக் கமிட்டியில் அங்கம் வகிப்பது யாருக்காக? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அமைச்சர் கெனமன் ஏழை குடியிருப்பாளருக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார் என்பதை அவரது திரிபுவாத கட்சியினரே அம்பலப்படுத்துகிறார்கள்.

இச் சம்பவம் இப்பகுதி மக்களிடையேயும், இக் கடையைச் சுற்றியுள்ள குடியிருப்பாளர்களிடையேயும், இதேபோன்று குடியிருக்கும் வாடகை வீடுகளிலிருந்து தமது குடும்பமும், உடைமைகளும் பலாத்காரமாக எந்த நிமிடத்திலாவது தெருவில் வீசப்பட்டு, வெளியேற்றப்படலாம் என்ற பீதியை தோற்றுவித்துள்ளது.

◎ 3-ம் பக்கத் தொடர்

தனிமைப்படுத்துங்கள். பெரும்பான்மையான மக்களை எமது நியாயமான போராட்டத்தின் பக்கம் வென்றெடுங்கள். கெனமன் திரிபுவாத கும்பலினதும் அல்லது இந்த அரசாங்கத்தினதும் போலி வாக்குறுதிகளை உதறித் தள்ளுங்கள். பொலிஸ் நமக்கு ஆதரவு அளிக்கும் என நம்பி ஏமாறாதீர்கள்.

உங்கள் சக்தியில் உறுதியான நம்பிக்கை வையுங்கள். ஐக்கியப்படுத்தக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்துங்கள். நண்பர்களெனக் கூறும் போலி வேஷதாரிகளை அம்பலப்படுத்துங்கள். பிரதான எதிரியை தனிமைப்படுத்துங்கள். புரட்சிகரப் போராட்டப் பாதையில் அணிதிரண்டு இறுதி வெற்றி வரை போராடுங்கள்.

அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பிற்போக்கு சக்திகள் அனைத்தையும் ஒழித்துக் கட்டும் பொதுவான புரட்சிகர இயக்கத்தின் ஒரு பகுதிதான் சாதி ஒடுக்குமுறைக்கும், தீண்டாமைக்கும் எதிரான போராட்டம். இந்த உன்னதமான போராட்டத்திற்கு இந் நாட்டிலுள்ள சகல புரட்சிகர மக்களும், முற்போக்கு எண்ணங்கொண்டவர்களும் தமது உறுதியான ஆதரவை நிச்சயமாக அளிப்பார்கள்; அளிக்கவும் வேண்டும்.

## பலாங்கொடை வேவத்தை தோட்டத்தில் தொழிலாளர்களின் போராட்டம்

பலாங்கொடை பகுதியிலுள்ள வேவத்தை தோட்டத்தில் இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தில் பெரும்பான்மை அங்கத்தவர்கள் இருப்பதால் தோட்டக் கூட்டம் நடத்த அனுமதிக்குமாறு செங்கொடிச் சங்கம் தோட்ட நிர்வாகத்திடம் கேட்டது. தோட்டத்துரை கூட்டத்துக்கு அனுமதிக்க மறுத்ததோடு, சங்கத்தை பிளவுபடுத்தவும் முயன்றான். இதை எதிர்த்து வேவத்தை தோட்டத் தொழிலாளர்கள் கடந்த ஜூலை 27ந் திகதி வேலை நிறுத்தம் செய்தார்கள்.

வேலை நிறுத்தம் 3 தினங்கள் நடைபெற்றது. தொழில் கந்தோர் தலையிட்டு உடனடியாக பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்து தருவதாகக் கூறியதனால் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை சீர்குலைத்து தோட்டத் துரைக்கு உதவ திரிபுவாதிகளின் பெயர்ப் பலகைச் சங்கம் முயல்கிறது. அதன் பிரதிநிதி தனது கையாட்களை அழைத்து வந்து தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறும், தனது சங்கத்தில் சேருமாறும் பல தில்லுமுல்லுகளையும், பயமுறுத்தல்களையும் கையாண்டான். வேவத்தை தொழிலாளர்கள் இந்த காட்டிக் கொடுக்கும் பெயர் பலகைச் சங்கப் பிரதிநிதியின் துரோகச் செயல்களுக்கு இடம் கொடுக்காமல் செங்கொடிச் சங்கத்தின் தலைமையில் போராட்டப் பாதையில் உறுதியுடன் நிற்கிறார்கள்.

◎ 1-ம் பக்கத் தொடர்

இங்கு அடிப்படை பிரச்சினை, இது பிரச்சினையின் மையம்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், முதலாளிகளால் வழங்கப்பட்டுள்ள லயன் காம்பராக்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் கோருவது என்னவெனில் தற்போது அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள இதர குடியிருப்பாளர்களுக்கு இருப்பதைப் போன்ற பூரண குடியிருப்பு உரிமைகளை உத்தரவாதமளிக்கும் சட்டத்தையேயாகும்.

தனது முதலாளியிடமிருந்து முன் கூட்டி அனுமதியேதும் பெறாமலும், உங்களது நகல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஆலோசனையின்படி அத்தாட்சிப்பத்திரம் பெறுவதன் மூலம் தனது தனித்துவத்தை நிரூபிக்கும் ஏளனச் செயலுக்கு இலக்காகாமலும் தொழிலாளர்கள், தமது நண்பர்களை, உறவினர்களை அல்லது யூனியன் பிரதிநிதிகளை இரவிலோ, பகலிலோ எந்த நேரத்திலோ வரவேற்கும் உரிமையை இது உள்ளடக்க வேண்டும்.

கிரிமினல் அத்துமீறிப் பிரவேசச் சட்ட சம்பந்தமான பிரச்சினையை எமது ஆலோசனைகள் உள்ளடக்குகின்றன.

நாம் கூறியுள்ள விதிகளை உள்ளடக்கிய மசோதா ஒன்று காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் முதலாவது தொழில் அமைச்சர் பதவியை வகித்த டி. பி. இலங்கரத்தினாவினால் தயாரிக்கப்பட்டது என்பதை நாம் எங்களுக்கு நினைவுபடுத்தவிரும்புகிறோம். எனினும் பிற்போக்காளர்களின் நிர்ப்பந்தத்தின் விளைவாக இம் மசோதா வெளியே தலைகாட்டாதது மிகவும் துர்அதிஷ்டவசமானதாகும். உங்களால் கொண்டுவரப்பட்டுள்ள சட்டம் முற்றிலும் திருப்தியானது அல்ல என நாம் கருதுகின்றோம். எனவே, நீங்கள் அந்த மசோதாவை ஆராயுமாறும் உங்களால் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்துக்குப் பதிலாக அதே மசோதாவையோ அல்லது அது போன்ற ஒரு மசோதாவையோ கொண்டுவருமாறும் நாங்கள் வேண்டுகிறோம்.''

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2